380

380

# அர்ச்சுனன் சண்டை நாடகம்

## துரியோதனன் கெர்வபங்கம்



மலர்மகள் பதிப்பு

இதன் விலை] [அணா 12

O-,2NRN,A
N47
108648

உ

கண்ணன் துணை

# துரியோதனன் கெர்வபங்கம் என்னும்

# அர்ச்சுனன்

# சண்டை நாடகம்

திருக்கோவிலூர் தாலுக்கா தேவனூர் கிராமம்

சுப்பராயலுநாயுடு குமாரர்

நாடக உபாத்தியாயர்

**இராமசாமி நாயுடு அவர்களால்**

இயற்றப்பட்டது

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடம்

சென்னை

ரிஜிஸ்டர் காபிரைட்] 1947 [விலை அணா 12

23, தாண்டவராயப்பிள்ளை வீதி.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், ம-া-া-ஸ்ரீ, திருக்கோவிலூர் தாலுக்கா தேவனூர்கிராமம் சுப்பராயலுநாயுடு குமாரர் நாடக உபாத்தியாயர் இராமசாமிநாயுடு அவர்களால் இயற்றிய "துரியோதனன் கெர்வபங்கமென்னும் அர்ச்சுனன் சண்டை நாடகம்" ஆகிய இப்புத்தகத்தை ஷையாரிடம் சகல சுதந்தரமும்பெற்று அடியிற்கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கின்றேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு

அ. இராஜரத்தின முதலியார்.

கண்ணன் துணை

# துரியோதனன் கெர்வபங்கமென்னும்

# அர்ச்சுனன் சண்டை நாடகம்

மாரியம்மன் கவி

பாரினில்வளமும்செல்வம் பல்குதர்க்கமைந்ததான
பாரீர்வளமுமாதி வளமெலாஞ்செழித்துவாழி
கூரியதவத்தின்மிக்காள் கூறியவரமேற்கொண்ட
மாரியம்மையைதாள்போற்றி வாழ்குவம்வம்மின்பாரீர்.

கவி

எத்திசையெவரும்போற்றும் எமதுதேவனூரில்லுங்கும்
நத்தியசீர்கால்கோவில் நண்ணிவீற்றிருந்துவந்து
பத்திசெய்யடியார்வேண்டும் பண்பெலாம்அருளிகார்க்கும்
முத்துமாரியினற்பாதம் முடிக்கணிந்துய்வோம்வாரீர்

சண்முகன் துணை

விருத்தம்

கஞ்சுண்டபரமருக்கு நற்சுதனுகத்தோன்றி
கஞ்சனைச்சிறையில்வைத்த கந்தனேஉன்தாள்போற்றி
பஞ்சையான்சொல்லிலொன்று பழுதுகள்வந்திடாமல்
தாளத்தில்இருந்துகார்ப்பாய் தயாபராபோற்றிபோற்றி.

கண்ணன் துணை

விருத்தம்

மூலமென்றழைத்தயானை முக்கியமுதலைக்காக
காலனைப்போலவந்த கண்ணனேகழல்பணிந்தேன்
பாலகன்கதையைப்பாட பரந்தாமாகருணைவைத்து
ஞாலத்திலிருந்துகார்ப்பாய் தயாபராபோற்றிபோற்றி.

## விநாயகர் வருகிற கவி

சிரசினில்மகுடமின்ன திருமுடியலங்கரித்து
ஆகுவாகனத்திலேறி அருமறைமுனிவர்பாட
இந்திரதேவர்போற்ற இருபுறம்கணங்கள்சூழ
கரிமுகமுடையவேத கணபதிவருகின்றாரே.

# துரியோதனன் கெர்வபங்க மென்னும்

## விநாயகர் தரு

கெங்கையணியுமீசன் மங்கைசிவகாமிபாலன்
கீர்த்திபிரதாபன்வந்தார் ஐங்கரமூர்த்தி
கீர்த்திபிரதாபன்வந்தார் கெ

போதநாதவிநோதன் பொங்குமுடனணிந்த
பூச்சக்கரக்குடைகவிக்கவே ஐங்கரமூர்த்தி
பூரித்துகொலுவில்வந்தாரே கெ

ஆனைமுகமிலங்க அழகுபுஜங்கள் துன்ன
சேனைதளங்கள் சூழ சித்தமுடன்சபையில்வந்தேன் கெ

தண்டைகடகமாட தாளமத்தளம்போட
அண்டையில்மாதராட அழகாய்சாமரைபோட கெ

வேலவர்தனக்குமூத்தோன் வீதியில்நின்றுகார்த்தோன்
பாலன்ராமசாமிதன்னை பாதுகாக்கசபையில்வந்தேன் கெ

## துரியன் வருகிற கவி

முடிபெற்றவீரரெல்லாம் நடுங்குந்தீரன்
முரசுடங்காளமரிசின்னம் பேரிபாட
கெடிபெற்றமன்னவனும் சகுனிகர்ணன்
கெம்பீரதம்பியர்கள் சேனைசூழ
அடிபெற்றவீரமணி கலகலென்ன
ஐவரையும்ஆரண்யத்தில் காணவென்று
துடிபெற்றதுரகமணி ரதத்திலேறி
துரியபூபதிசபைக்கு வருகின்றேனே.

### துரியன் தரு-அடதாளம்-சாப்பு

அஸ்தினபுரத்தையாளும் அரவக்கொடிபடைத்த
அரசன்கொலுவதாகினர் துரியபூபன்
அரசன்கொலுவதாகினர்

அண்டமண்டலமெல்லாம் கண்டுஎனைவணங்க
அதிபெலதுரியனும்வந்தேன் கொலுசம்ப்ரமதாக
அதிபெலதுரியனும்வந்தேன்

சுருள் அண்டரெண்டமெனைக் கண்டுவணங்கிட
மண்டலத்தோர்க்கு வந்துபணிந்திட அஸ்

கண்டோர்நடுங்கிடவே காலருத்திரனென்ன
கடுங்கோபங்கொண்டுவாரானே துரியபூபன்
கடுங்கோபங்கொண்டுவாரானே

சுருள் கவலையுடனேநான் காரிருள்தன்னிலே
தேடிஓடினேன் கானகம்தன்னிலே அஸ்

எந்தனைஜெயிப்பவர்கள் இந்தஉலகிலுண்டோ
எவராகிலும்எனக்கு எதிரியிருக்கின்றாரா அஸ்
வனந்தனிலேனாலும்சென்று வலுவுள்ளஐவர்களை
கடுமையாகதேடவேண்டுமே மந்திரிமாரே
கடுமையுடன்தேடவேண்டுமே

சுருள் காட்சியுடனேநான் ஆட்சியாய்ஐவரை
தாட்சண்யமில்லாமல் கானகம்ஓட்டவே அஸ்

## துரியன் கவி

மந்திரிமாரேகேளீர் மாநகர்வளப்பமெல்லாம்
விந்தையாய்நாமிருந்தோம் விரைவினில்பாண்டவாளை
எந்ததோர்வனத்திலவர் இருக்கின்றார்என்றறிந்து
சுந்திரதூதர்தம்மை சுருக்கினில்அழைத்துவாராய்.

## துரியன் வசனம்

வாருங்கள் மந்திரிமாரே! நாமென்ன பாண்டவர்களை கானகம் ஓட்டிவைத்தோமே அவர்கள் உயிருடன் யிருக்கிறதும் இல்லாததும் தெரியவில்லை. ஆகையால் நமது தூதர்களை அழைத்துச் சங்கதி சொல்லவேண்டும். ஆகையால் அதிவிரைவாகச்சென்று தூதரை அழைத்துவாரும் மந்திரிமார்களே.

## பொது வசனம்

இவ்விதமாக துரியோதனமகாராஜன் உத்திரவின்படி தூதரை அழைக்க தூதர் வருகின்றவிதங் காண்க.

## தூதர் வருகிற கவி

துரியனும்அழைத்தசேதி துரிதமாய்காதில்கேட்டு
பாசமாய்எழுந்திருந்து பலவிதஆடைபூண்டு
காசினியோர்களெல்லாம் கண்டுமேமனம்நடுங்க
வீசியேநடந்துதூதர் விரைவினில்வருகின்றாரே.

## தூதர் தரு

தூதர்வந்தாரேசபைதனில் தூதர்வந்தாரே
தூதரும்வந்தாரே துன்னிநடந்துமே
சேதியறிந்திட சீக்கிரமாகவே தூ
தட்டிசல்லடம் கட்டியிறுக்கியே
எட்டுதிக்கும்அஞ்சா யிளஞ்சிங்கம்போலவே
மன்னன்அழைத்திட்ட சேதிதெரிந்திட
இன்னவிதமென்று கண்டுயறிந்திட
கத்திகெதையீட்டி கையினில்கொண்டுமே
மெத்ததோர்வார்த்தைகள் பேசியேவிண்டுமே தூ

தூதர் வசனம்

சரணம்சரணம் மகாராஜனே! எங்களை அழைத்தவிதம் இன்னதென்று தெரிவிக்கவேண்டும் மகாராஜனே.

துரியன் தரு

உங்களை அழைத்தவிதம் தூதுவரே அடா தூதுவரே
உரைத்திடுவேன்உங்களுக்கு தூதுவரே

தூதுவர் தரு

அழைத்தவிபரமதை ராஜனே மகா ராஜனே
அறிவிக்கவேண்டுமையா ராஜனே

துரியன் தரு

அதிவேகமுடன்நீங்கள் தூதுவரே அடா தூதுவரே
ஆரண்யம்சென்றுநீங்கள் தூதுவரே
ஐவர்பஞ்சபாண்டவரும் தூதுவரே அடா தூதுவரே
ஆரண்யத்திலிருக்கிறுரா தூதுவரே
இல்லையாவென்றுபார்த்து தூதுவரே அடா தூதுவரே
என்னிடத்தில்வந்துசொல்லும் தூதுவரே
ஒன்றும்ஒளியாமலே தூதுவரே அடா தூதுவரே
உற்றதைசொல்லவேண்டும் தூதுவரே அதி

தூதுவர் தரு

அதிவேகமுடன்நாங்கள் ராஜனே மகா ராஜனே
ஆரண்யத்தில்சென்றுநாங்கள் ராஜனே
அதிசீக்கிரமாக ராஜனே மகா ராஜனே
ஐவரைப்பார்த்துவாரோம் ராஜனே அதி

துரியன் வசனம்

கேளும் தூதுவர்களே! நீங்கள் அதிவேகமாகச்சென்று பஞ்சபாண்டவர்கள் யிருக்கின்றுரா யில்லையா தெரிந்துகொண்டு வந்து பதில் சொல்லும் தூதுவரே.

தூதுவர் வசனம்

அப்படியே பார்த்து வருகிறோம் மகாராஜனே.

நொண்டிச்சிந்து

நடந்தார் தூதுவர்கள் கானகம்
நாடிடும்பஞ்சவரைதேடியேபார்க்க
கடந்தார்மலைகளையும் வேகமாய்
காடுமலைமயேந்திரிகிரிபர்வதம்பார்த்தோம்

காமதேனுவனத்தில் பஞ்சவரை
கடுமையுடனேபார்த்துஓடியேவந்தோம்

ஆதவன்மதியுங்காணு வனத்தினில்
ஐவர்பஞ்சபாண்டவரைபார்த்துமேவந்தோம் தந்தான

## தூதுவர் வசனம்

சரணம்சரணம் மகாராஜனே! பஞ்சபாண்டவர்கள் காமதேனு வனத்தில் யிருக்கின்றூர்கள். நாங்கள் பார்த்துவந்தோம் மகா ராஜனே.

## தூரியன் வசனம்

கேளும் மந்திரிமார்களே! நீங்கள் விரைவாக அரண்மனைக்குச் சென்று என் நல்லம்மானுகிய சகுனிமாமனை நான் அழைத்தாக அழைத்துக்கொண்டு வாரும் மந்திரிமார்களே.

## சகுனி வருகிற கவி

வடிவுள்ள தூரியபூபன் வந்திட அழைத்தசேதி
முடுகியேசிலைவாளேந்தி முருகாணிகச்சைகட்டி
இடிபோலபேரிபோட எதிரில்லாசேனைசூழ
சல்லரிமுரசுபாட சகுனியும்வருகின்றேனே.

## சகுனி தரு

சகுனிராஜனும்வந்தேனே மிகவடிவினில்அழகிய
சகுனிராஜனும்வந்தேனே

சகுனிராஜனும்வந்தேன் சற்றும்பயமற்றவீரன்
சித்தமுங்கலங்கிவாட எத்திசையுங்கொண்டாட

காலருத்திரன்போல கனகமணிதேரிலேறி
பாலசந்திரன்போல பதரிகோபமுங்கொண்டு

பம்பைமுரசுபாட பண்டுசூரனென்றுவாட
உம்பர்மெச்சியேசேனை உலகமெங்குமோட சகு

## சகுனி வசனம்

கேளும் மந்திரிமார்களே! நான் வந்திருப்பதாக தூரியோதன ராஜனுக்கு தெரிவித்துவாரும் மந்திரியே.

## தூரியன் தரு

வாரும்வாரும்ஓய்மாமாவே ஓகோமாமாவே
வந்ததுசந்தோஷந்தான் மாமாவே வா

சகுனி தரு

வாழ்ந்திடுவாயேசுகமதாக வல்லவாநீயே
வாழ்குவாய்யினியொரு தாழ்வுவாராமலே
ஆழிசூழ்உலகில்மிக்க அரசர்க்குமேலாக வா

துரியன் தரு

(அம்பிகா என்ற மெட்டு)

வாழுமென்றுசொன்னதினாலே மனமதில்மகிழ்ந்தேன்மேலே
ஊழ்வினையெல்லாந்துலைத்தேன் உத்தமனேயுன்னைக்கண்டு
தாழ்வுகள்வாராமலே தற்காப்பீர்எந்தன்மாமா

சகுனி தரு

(அம்பிகா என்ற மெட்டு)

மன்னவா துரியபூபா என்னை இன்றழைத்ததென்ன
இன்னவிதம்என்றுநீரும் எடுத்துஉரைத்தீரானால்
சொன்னதைப்போலமுடிப்பேன் சுந்தரனே தடுத்திடாமல்

துரியன் தரு-அடதாளம்

காமதேனுவனத்தில் காளையந்தபஞ்சவர்கள்
கானகத்தில்கண்டுவந்தாரே தூதுவர்களும்
கானகத்தில்கண்டுவந்தாரே
பஞ்சவரைக்கொல்ல பக்ஷமுடன்எந்தனுக்கு
உற்றதந்திரம்சொல்லவேண்டுமே எந்தனின்மாமா கா

சகுனி கவி

சங்கதிசொல்வேன்கேளாய் தாரணியாள் துரியபூபா
அடர்வனம்தன்னைநாடி அறிந்திடவேணுமிப்போ
சதிருடன்கானகம்நாடி சடுக்கெனபோகவேண்டும்
வெகுவிதசேனைதன்னை விரைவினில்கூட்டிச்செல்வோம்.

சகுனி வசனம்

கேளும் மருமகனே! நாம் கானகம்சென்று பாண்டவாளை கண்டோமானல் இன்னும் பதிமூன்றுவருஷம் வனவாசம் ஓட்டிவிடலாம். ஆகையால் நமது சேனைகளை தயார்செய்யும் மருமகனே.

துரியன் கவி

மந்திரிமாரேகேளீர் மனமதில்வெவ்வேறாக
சிந்தனையானுங்கொண்டேன் தெரிவிக்கவேண்டுமிப்போ
சுந்தரவதியிருக்கும் சொகுசுள்ளபாடஞ்சென்று
விந்தைபெருந்திருவாள் தன்னை விரைவுடன் அழைத்துவாராய்.

சூரியன் வசனம்

வாரும் மந்திரிமார்களே! நமது அரண்மனைக்கு சென்று நமது தேவியாகிய பெருந்திருவானையை நான் அழைத்தேனென்று அதி சீக்கிரமாக அழைத்துவாரு மப்பா மந்திரிமார்களே.

பெருந்திருவாளை வருகிற கவி

நாதனும்அழைத்தசேதி நலமுடன் காதில்கேட்டு
குங்குமகலபம்பூசி கோலமாய்சிங்காரித்து
கங்கணகடயம்தோடா கரமதில்மிகவே தண்ண
பெருந்திருவாளைமாது பிரியமாய் வருகின்றேனே.

பெருந்திருவாளை தரு

அஸ்தினபுரத்தையாளும் அரசன்அழைத்தாரென்று
அதிரூபவதியும்வந்தேன் பெருந்திருவாள்
அதிரூபவதியும்வந்தேன்.

குயிலைப்போல்தொனியுடையாள் மயிலைப்போலநடையுடையாள்
கயல்விழிக்குமையும்தீட்டி கன்னியும்வந்தேனே அஸ்

பச்சைநிறகண்ணன்தேவி லக்ஷிமிதனக்குமேலாய்
விசித்திரவடிவமுள்ள மெல்லியும்வந்தேன் அஸ்

வன்மையுள்ளதேவனூரில் வாழும்சிறுபாலனை
ராமசாமிதமிழ்பாடி தையலும்வந்தேன் அஸ்

பெருந்திருவாள் வசனம்

கேளும் தாதிமார்களே! நான் என் நாதரைக் காணவேண்டும். ஆகையால் நாம் நந்தவனத்திற்குச் சென்று மல்லிகை முல்லை இருவாக்ஷி முதலிய புஷ்பங்களை எடுத்து வந்து பாதம் பணிய வேண்டும். ஆகையால் சீக்கிரம் வாருங்களடி தாதிமார்களே.

பெருந்திருவாள் தரு

(செந்தமிழ் என்றவர்ண மெட்டு)

அருமையுடையதாதி வருகுவாய்எந்தனோடு
அழகாகநாமும்கூடியே நந்தவனம்
இருவரும்செல்வோம் சேடியே

பாசமானநல்ல வாசனைமலர்களை
ஆசையுடன்பரித்து நேசமாய்வருகலாம்

பங்கையகண்ணன்பாதமே துதிகள்செய்து
மங்கையாள்செல்வோம் சதமே

பெருந்திருவாள் வசனம்

வாரும் தாதிமார்களே! நந்தவனத்தில்சென்று புஷ்பங்களை எடுத்து வந்தோம் இனி நம்முடைய நாதரை சேவித்துக் கொள்வோம் தாதிமார்களே.

பெருந்திருவாள் ஓரடி தரு

சருணம் செய்தேன் நாதனே
தருணமிது வேதனே
கருணையுடன் எந்தனை
காக்கவேண்டும் வேதனே சர

துரியன் தரு

என்பாதமதில் போற்றிசெய்த
பாவையெந்தன் பெண்மயிலே
நீவாழி நன்றாய் வாழ்ந்திருப்பாய்
இந்தவையகத்தில் சுகித்திருப்பாய் என்

பெருந்திருவாள் வேறு தரு

என்னை அழைத்ததேனோ மன்னவரே ஓகோ மன்னவரே
எனக்கறிய சொல்லவேண்டும் மன்னவரே

துரியன் தரு

உன்னை அழைத்தசேதி பெண்மயிலே அடி பெண்மயிலே
உரைத்திடுவேன் கேளடிநீ கண்மணியே

பெருந்திருவாள் தரு

உரைக்கும்வார்த்தைதகமிளன்று மன்னவரே ஓ மன்னவரே
உற்றதைநீர் சொல்லவேண்டும் மன்னவரே

துரியன் தரு

ஐவர்பஞ்சபாண்டவர்கள் கண்மணியே அடி பெண்மணியே
அவர் ஆரண்யத்திலிருக்குறாராம் கண்மணியே

பெருந்திருவாள் தரு

இருந்தாலதற் கென்ன மன்னவரே ஓ மன்னவரே
அவரை ஈடழிக்கலாகுமோதான் மன்னவரே

துரியன் தரு

எந்தனை தடுத்திடாதே மானே மட மானே
ஏகிநான் பார்த்துவாறேன் மானே

பெருந்திருவாள் தரு

போகவேண்டாம் எந்தன் நாதா ஆகாத கினவு கண்டேன்
ஏகினால் பழிகள்நேருமே என்னிடநாதா
நீர் ஏகினால் பழிகள் நேருமே

சூரியன் தரு

சிந்தைநொந்து வாடலாமோ எந்தனிட பிராணதேவி
சுந்திரனும் சென்று வாரண்டி என் பெண்மணே கண்மணே
சுந்திரனும் சென்று வாரண்டி

பெருந்திருவாள் தரு

உந்தனுக்கே துன்பம்வரும் எந்தன்வார்த்தை தடுத்துப்போனால்
உருகுதே எந்தன் மனது என் பிராணநாதர்
உருகுதே எந்தன் மனது

சூரியன் கந்தார்த்தம்

வார்த்தையை தடுத்துச்சொல்லும் வண்டணி குழலினாளே
உலகத்து மன்னரெல்லாம் ஒருமித்து வந்தாலுமே
அனைவரும் என்னைக்கண்டால் அஞ்சியே ஓடுவார்கள்
கண்டேன் நான் கினவென்று,

தரு

கன்னியேதவித்து வாடாதே கினவு நீயும்
கண்டால் வீண்போகாதே

அன்னவாகனபிரம்மன் ஐயன்எழுத்தைத்தடுக்க
ஆரால்முடியுமோடி எந்தனைதடுத்திட கன்

பெருந்திருவாள் கந்தார்த்தம்

விதியதை ஒருவராலும் விலக்கவே போகாதென்றீர்
பதிதனில் அநேகமாந்தர் பாவையாள் வார்த்தைமீறி
எதிரியாய் போனமன்னர் எவரெவர் பிழைத்திட்டார்கள்
கெதியறியாமல் வீணாய்.

தரு

கெட்டுபோகாதீர் மன்னனே எனது மொழி
தடுத்துபோகாதீர் சொன்னேனே

கட்டழகி உக்கிரகண்டி கன்னிவார்த்தை மீறிபோன
துஷ்ட கயமுகாசூரன் சேதிதன்னை அறிவீரோ கெ

துரியன் கவி

செப்புவேன்வார்த்தையொன்று சேயிழையாளேகேளாய்
அடவுடன்பாண்டவாளை அதாகுதம்செய்யஎண்ணி
பம்பையுடன்பயணமாக பதரியேபோகும்போது
தடுத்துநீபேசவேண்டாம் சல்தியில்வருகுவேனே.

துரியன் வசனம்

கேளும் எனது பிராணதேவி! அதோ என்ன நான் நம்முடைய எதிரியாகிய பாண்டவர்கள்மீது படை எடுத்து அவர்களை அதா குதம் செய்து வரும்படியாக போகிறபோது, நீ என்னை தடுத்து அவசகுனம் செய்யவேண்டாம். நீ அரண்மனையில் சென்று உன் தாதிமார்களுடன்கூடி சுகமாக இருப்பாய். நான் சற்றுநேரத்தில் சென்று பாண்டவர்களை அதம்செய்து வருகிறேன் பெண்ணே பிராணதேவி.

பெருந்திருவாள் கொச்சகம்

மன்னனும் புவியாளும் மன்னவர்கள் தான்வணங்க
மின்னு முடிவதன வேந்தற்கு வீரியனே
கன்னியரை தனியாய்விட்டு கடுகெனவே போகலாமோ
கர்த்தனே கூடவேதான் கன்னியும் வருகுவேனே.

பெருந்திருவாள் வசனம்

கேளும் நாதா! நானும் தங்களோடுகூட ஆரண்யத்தில் வேடிக் கைப் பார்க்கவேண்டும். ஆகையால் நானும் உம்மோடு கானகம் வருகிறேன் நாதா.

பொது வசனம்

இவ்விதமாக பெருந்திருவாளும் துரியனும் சகுனிமாமனும் கர்ணனும் பீஷ்மாச்சாரியும் இவர்களெல்லாம் தேரேறி கானகம் போகின்றவிதம் காண்க.

துரியன் அடதாளம் தரு

அஸ்தினுபுரத்தைவிட்டு அடவிதனிலேநாடி
ஆசையுடன் ஓடிவாரானே துரியபூபன்
ஆசையுடன் ஓடிவாரானே
கெடிபெற்றசகுனிமாமன் கீர்த்தியுள்ளபீஷ்மர் துரோணர்
கெற்சித்து ஓடிவாராரே அதிவேகமாய்
கெற்சித்து ஓடிவாராரே
காமதேனுவனத்தில் காளைபரைகாணுமலே
கவலைகொண்டு ஓடிவாரானே துரியபூபன்
கவலைகொண்டு ஓடிவாரானே

வனமாய்வனங்கள் தாண்டி வந்தோம்வெகுதூரம்தேடி
மனக்கவலையாக வாரானே துரியபூபன்
மனக்கவலையாக வாரானே

ஆறுசுனையை தாண்டி தூரும்புதாருவிட்டு
அடவியில்வந்து சேர்ந்தேனே துரியபூபன்
அடவியில்வந்து சேர்ந்தானே

பொது வசனம்

இவ்விதமாக துரியோதனன் பாளையமிறங்கி யிருக்க துவாரகை கிருஷ்ணமூர்த்தி காமதேனு வனத்தைநாடி வருகிறவிதங் காண்க.

கிருஷ்ணமூர்த்தி வருகிற கவி

அரிகரிவாசுதேவன் அகிலமோரடியளந்தமாயன்
கரிமுகில்வதனதீரன் காகுத்தன்அன்பர்களன்பன்
வரிசிலைபலவுந்தாங்கி வடிவானகெருடனேறி
வனந்தினில்துரியன்வர வைகுந்தன்வருகின்றேனே.

கிருஷ்ணன் தரு

ஆயர்குலத்தில்வந்து அவதரித்திடும்தீரன்
ஆதிநாராயணர்வந்தேன் அண்டமுமோரடியாயளந்தவன்
ஆதிநாராயணர்வந்தேன்

மாயவன் ஐவர்க்கன்பன் மச்சகூர்மஅவதாரன்
மண்ணுவிண்ணுமளந்த கண்ணன்பத்தவதாரன்
மாதவசீலன் நல்ல யாதவதீரன்

சுருள் காதககார்முக பாதகராவணன்
சிதரவேமதி சூதவினோதன் ஆய

அண்டமெண்டபுவனம் எண்டிசைசராசரங்கள்
அனைத்தும் குக்ஷியிலளித்தேன் வெகுவேடிக்கையாக
அனைத்தும் குக்ஷியிலளித்தேன்

தரணியையாளஐவர் தயவாகஉயிர்கொடுப்பேன்
சதமதுவிடுப்பேன் துரியனைஅதமதாய்கெடுப்பேன்

சுருள் ரதமுடன்படைகளை சிதரவேஅடிப்பேன்
கதியுடன்குளமதை பரிவுடன்செல்வேன் ஆய

வீரஐவர்க்கு தூதுமீரிவிதுரராஜன்
வில்லையரணுல்முறிப்பேன் நிலவரைக்காவல்
மல்லரைகாலாலேமெரிப்பேன்

சூரகர்ணனிடத்தில் குந்திதனைவிடுப்பேன்
துடுக்கானகணைபின்பு எடுக்காமலேதடுப்பேன்
துரைகளும்நாட வேதமறையவர்தேட

சுருள் தரைபுகழ்அஸ்வத்தாமனை அடிக்கிறேன்
கிறுகிறென்றோடவே ரதமதைமுடிக்கிறேன் ஆய

## கிருஷ்ணன் கவி

மாதவாசொல்லக்கேளாய் மாநிலம்புகழயானும்
சீதரன்வனத்தைநாடி சீருடன் அமர்ந்திருக்க
பாதகன்துரியராஜன் பாண்டவர்களைவரையும்தேடி
ஆவலாய்வருகின்றானே அவனைநாம்காணலாகும்.

## வசனம்

கேளுமப்பா மாதவா! இன்றையதினம் துரியோதனன் ஐவர்களையும் தேடிவருகிறான். அவன் வருகிறதைப்பார்த்தால் ஏதோ சூதுமார்க்கமாக யிருக்கிறது. ஆகையால் நாம் முந்திசென்று அவனுக்கு தாகவிடாய் கொடுத்து தண்ணீரில்லாமல் எங்கிலும் செய்ய வேண்டும். அதுவுமன்றி காமதேனு குளத்தை இடையர்களிடத்தில் தெரிவித்து பசுமந்தைகளையும் விட்டு கலக்கும்படி சொல்ல வேண்டும். நாம் நமது கருடனேறி கானகம் செல்வோம் வாருமப்பா மாதவனே.

## கிருஷ்ணன் தரு

ஐவரைக்காக்கவென்று ஆயன்மனதிலெண்ணி
அன்புடன் ஓடிவாராரே கானகமார்க்கம்
தென்புடன் தேடிவாராரே ஐவ

இன்றுவந்ததுரியனையான் பாரதமுள்ளவரைக்கும்
பங்கமதுசெய்வேனென்றுமே அரிகிருஷ்ணதேவர்
பரந்தாமன் ஓடிவாராரே ஐவ

மண்ணும்வெண்ணெயுண்டநாதன் மைத்துனர்ஐவரைக்காண
விண்ணவர்அதிஜெயிக்கவே அரிகிருஷ்ணதேவர்
வேடிக்கையாய் வந்துமேவினர் ஐவ

பத்தர்சித்தர் நித்தம்போற்றும் பாலன்ராமசாமிபோற்றும்
சித்திக்கும் செந்தமிழ்பாடியே அரிகிருஷ்ணதேவர்
ரக்ஷிக்கநடந்து வாராரே ஐவ

## பொது வசனம்

இவ்விதமாக மகாவிஷ்ணு கானகத்தில் இடையர்களிடத்தில் ஜலத்தை கலக்கும்படி தெரிவித்து ஓரிடம் அமர்ந்திருக்க இப்பால் துரியன் தூதுவரைப்பார்த்து ஏதென்று தெரிவிக்கிறவிதங் காண்க.

துரியன் கவி

தூதரேசொல்லக்கேளீர் தொல்லுலகனைத்துஞ்சென்று
ஆதவன்மதியுங்காணு அடர்வனந்தன்னைநாடி
தாகமும்எடுப்பதாலே ஜலமிருக்குங்கிசையைத்தேடி
சேதிகள்வந்துரைக்க சீக்கிரம்வருவீரே.

துரியன் வசனம்

கேளும் தூதுவர்களே! நீங்கள் சீக்கிரம்சென்று ஜலமிருக்கும் திசையைத்தேடிப்பார்த்து ஜல்திவந்து பதில் தெரிவிக்கவேண்டும் தூதுவரே.

தூதுவர் கொண்டிச்சிந்து

மட்டில்லாதூதுவர்கள் அரசன்
உரைத்தமொழி சிரமேற்கொண்டு

ஜலமிருக்குந்திசையைத்தேடி தூதர்
ஜல்தியாகவேகமுடன் ஓடிவாராரே

காமதேனுகுளத்தைக்கண்டார் தூதர்
கடுகெனவேஅரசனிடம் தெரிவிக்கவந்தார் தக்

தூதர் வசனம்

சருணம் சருணம் மகாராஜனே! கானகமெல்லாம் திரிந்து அலைந்து பார்க்குமளவில் எங்கிலும் ஜலம் கிடைக்காமல் காமதேனு வனம்சென்று பார்த்தோம். அவ்விடத்தில் ஓர் குளமிருக்கிறது. அந்த குளத்தில் இடையர்கள் காமதேனு பசுமந்தைகளை விட்டு ஜலத்தைக் கலக்குகிறார்கள். அதை அறிந்து தெரிக்கவந்தோம் மகாராஜனே.

துரியன் கவி

திடமுடன்என்பின்வந்த சேனைகாவலரேகேளீர்
வடகோடிகானகத்தில் வந்துநாமிருந்தோமிந்த
படர்கானகத்திலுள்ள பசுக்கூட்டம்தன்னைவிட்டு
குளத்தையும்கலக்கிவிட்ட இடையரைவாட்டுவோமே.

துரியன் வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே! இடையர்கள் மதிப்பில்லாமல் மாடுகளை விட்டு குளத்தை கலக்கினபடியால் அவர்களை அடித்து அதாகுதம் செய்வோம் வாரும் தூதுவர்களே.

பொது வசனம்

இவ்விதமாக துரியோதனன் இடையர்களை அடித்து துரத்தி விட இடையர்கள் தேவேந்திரனிடம் தெரிவிக்க வருகிறபோது இந்திரன் வருகிறவிதங் காண்க.

தேவேந்திரன் வருகிற கவி

தேவர்கள்ரிஷிகள்சித்தர் சீருடன்பணிந்துபோற்ற
ஆவலாய்தெய்வகோமான் அன்புடன்எழுந்திருந்து
காவலர்கரங்குவிக்க கனகவச்சிரவாளேந்தி
மாமிவருவதனயிந்திரன் மகபதிவருகின்றேனே.

தேவேந்திரன் தரு அடதாளம்

தேவதேவர்கள்போற்றும் தெய்வலோகத்தையாளும்
தேவேந்திரன் வந்துமேவினன் கொலுவைநாடி
தேவேந்திரன் வந்துமேவினன்

காவலர் எனைவணங்கி காசினியில்புகழ
சுருள் கண்டவர்தெண்டமுங் கொண்டிடும்நாதன்
அண்டர்தேவர்புகழ விண்டிடும்நாதன் தேவ

அரம்பைஊர்வசியான பரதமாதர்களாட
திரமாய்திலோர்த்தமையும் தேவிமேனகைபாட
சுருள் சீரதாய்நாரதர் வீணையுமீட்டிட
பேர்பெரும்வாத்தியம் வானமேமுட்டிட தேவ

கற்பகபாரிஜாதம் கனகமணிமாலையும்
பொற்புள்ளநவரத்தின பூஷணங்களிலங்க
சுருள் பூங்கிளிமாதர்கள் தாங்கியேகவரிகள்
ஏங்கியேவீசவும் பாங்கழகா தேவ

கந்தர்வர்முனிவர் கருடகெம்புருடரும்
வந்திருபுரத்திலும் வானவரும்பணிய
சுருள் வச்சிரபடைகர உச்சிதம்பெருகிட
மெச்சிடமூவரும் கச்சிதமாக தேவ

இந்திரன் கவி

மருமலர்காமதேனு வானவர்முனிவர்கின்னரர்
திருநகர்தன்னிலுள்ள தேவகன்னியருமிக்க
தருமமேபெருகஎன்றும் தழைத்தோங்கிவாழ்ந்துநிற்கும்
குருமுனிபாதம்வணங்கி கொலுவினிலிருக்கின்றேனே.

இந்திரன் வசனம்

கேளுங்கள் மந்திரிகளே! நமது தேவலோகத்தி லுண்டான தேவர்கள் முனிவர்கள் யாவரும் காமதேனுவிருக்ஷம் முதலானதும் மேலாக தழைத்தோங்கி வரும்படி பரமசிவத்தை தியானம்செய்து வாநின்ற குருவாகிய பிரகஸ்பதி பகவான் அவர் பாதார கமலங் களுக்கு அநேக வந்தனம்.

பொது வசனம்

தேவேந்திரன் கொலுவில் வீற்றிருக்கும்போது இடையர்கள் முறையிடுவது.

இடையர் வசனம்

சருணம் சருணம் மகாராஜனே வடகோடி கானகத்தில் பசுக் களை மேய்த்து தண்ணீர் காட்ட குளத்திற்கு ஓட்டி ஜலம்காட்டி னோம். அஸ்தினாபுரத்திலிருந்து துரியோதனன் வந்து யாவரையும் அடித்து கொன்றுவிட்டான். நான் ஒருவன் தப்பி பிழைத்து தங்க ளிடம்தெரிவிக்க வந்தேன் சுவாமி.

இந்திரன் கவி

முடுகியசேனைதன்னை முன்பின்னுமறிந்திடாமல்
துடிக்கின்றதுரியனிட சூரத்தையறியவேண்டும்
விடுத்துமேளந்தனிட வீரியமுள்ளமைந்தன்தன்னை
சடுக்கெனஅழைத்தேனென்று ஜல்தியாய்அழைத்துவாராய்.

இந்திரன் வசனம்

கேளுமப்பா மந்திரிமார்களே! நமது குமாரனாகிய சித்திர சேனனை நான் அழைத்ததாக அதிசீக்கிரத்தில் அழைத்துவாருங்கள் மந்திரிமார்களே.

பொது வசனம்

இவ்விதமாக தேவேந்திரன் தனது குமாரனை அழைக்க சித்திர சேனன் சபைநாடி வருகிறவிதங் காண்க.

சித்திரசேனன் வருகிற கவி

அடுக்குள்ள அண்டமெல்லாம் அதிரவேமுரசுபேரி
முடுக்குள்ளபடையைக்கூட்டி முடிபணியலங்கரித்து
சடுக்கெனபயணமாகி தந்தையும்அழைக்கக்கேட்டு
திடுக்கிடஅதட்டிமீறி சித்திரசேனனும்வருகின்றானே.

### சித்திரசேனன் தரு

சிங்காரரதத்திலேறி சீர்பணியலங்கரித்து
மங்களமாய்சித்திரசேனன் வந்துமேவினேன்

தேரும்பரியானைசேனை திக்கெல்லாம்நடுங்கிடவே
பாடும்புகழ்சித்திரசேனன் பரிவுடன்வந்தேன்

பேரிகைமுரசுபாட பேரிடங்காதுத்தாரிசின்னம்
காமுடிவாத்தியம்பாட கடிகியேவநதேனிதோ

ஆயுதம்பளபளென்ன அம்புறாத்தூணிதானணிந்து
தூயமணிசித்திரசேனன் துடுக்குடன்வநதுமேவினேன் சிங்

### சித்திரசேனன் வசனம்

சருணம் சருணம் தந்தையே என்னை அழைத்தவிதம் என்ன தெரிவிக்க வேண்டும் தந்தையே.

### இந்திரன் தரு

அடிபணிந்தபாலனே அருமையுள்ளசீலனே
கெடிபெறவேபாருலகில் கீர்த்தியாய்வாழ்வாய்லோலனே அடி

### சித்திரசேனன் தரு

வாழ்வீரென்றுசொன்னதால் மனமதில்மகிழ்ந்தேனே
அழைத்தவிதம்இன்னதென்று அறிவிப்பீர்தந்தையே வா

### இந்திரன் தரு

உரைப்பேன்கேளுஞ்சீலனே உண்மையுள்ளபாலனே
விரும்பியேயுனையழைத்தேன் விந்தையுள்ளசீலனே உ

### சித்திரசேனன் கவி

தந்தையேசொல்லக்கேளாய் தனையனை அழைத்தசேதி
விந்தையாய்எந்தனுக்கு விபரத்தையுரைக்கவேண்டும்
அந்திரபுவியோர்போற்ற அளகையைவிலமதிக்கும்
எந்தனை அழைத்ததென்னோ எடுத்துரைசெய்குவாயே.

### இந்திரன் தரு

எந்தனிடகண்மணியே உந்தனை அழைத்தவிதம்
உரைத்திடுவேன்கேளுமப்பா கண்மணியே

காமதேனுபசுமேய்க்கும் காளையந்தஇடையர்களை
கண்டதுண்டம்செய்தானுமே என்மகனே

அதிவேகமாகசென்று அடவியில்நீயும்பார்த்து
அரசனைக்கொண்டுவாரும் கண்மணியே

சித்திரசேனன் தரு

வெற்றிபெற்றுநான்வருவேன் சிங்காரரதத்தைதந்தால்
சத்ராதிபயல்களை க்ஷணத்தில்கொண்டுவருவேன்
எனக்குவிடையளித்தால் இப்பொழுதேநானும்சென்று

ஏகியேனுன் பார்த்துவருகுவேன் என்தந்தையரே
ஏகியேனுன் பார்த்துவருகுவேன் ஏகியே

பெருங்கொலுவில் கொண்டுவருகுவேன் என்தந்தையரே
பெருங்கொலுவில் கொண்டுவருகுவேன் வெ

இந்திரன் வசனம்

கேளுமப்பா குமாரகா! உனக்கு சித்திரதேர் அழியாதபுரவி கவசகுண்டலம் முதலானதும் தந்தேன். பெற்றுக்கொண்டு நீ சென்று ஜெயம்பெற்றுவாரும் கண்மணியே.

சித்திரசேனன் கவி

தந்தையும்சொன்னவார்த்தை தனையனுங்காதில்கேட்டு
சித்திரசேனனுங்கோபங்கொண்டு சுருக்கினில்செல்லவேண்டும்
பாரியாள்எனதுதேவி பைங்கொடிதனையழைத்து
தீரவேவாக்குரைத்து சீக்கிரம்ஏகுவேனே.

சித்திரசேனன் வசனம்

கேளுங்கள் காவலர்களே! நான் ஆரண்யம் போகவேண்டும். ஆகையால் எனது தேவியாகிய சித்திரரேகையை நான அழைத்த தாக அழைத்துவாரும் காவலர்களே.

பொது வசனம்

இவ்விதமாக சித்திரசேனன் தனது தேவியை அழைத்து வரும்படி தெரிவிக்க சித்திரரேகையானவள் தன் நாயகனை காணும் படி சபைக்கு வருகிறவிதங் காண்க.

சித்திரரேகை வருகிற கவி

நாதனும்அழைத்தசேதி நலமுடன்காதில்கேட்டு
கதிர்பெருமிடையில்ரத்ன கனகமாபட்டுடுத்தி
கர்த்தனர்பரமன்பாதம் கன்னியாள்துதிகள்செய்து
சீர்பெரும்பணிகளாட சித்திரரேகையும்வருகின்றேனே.

சித்திரரேகை தரு

வந்தேன் சித்திரரேகைமாது அதிலுமிலாய்
வந்தேன் சித்திரரேகைமாது

வந்தேன் சித்திரரேகை வானுலகத்துமாது
சிந்தைமிககளித்து சிருடனிதோவந்தேன் வந்

காலில் அணிந்ததண்டை கலகலகலவென்ன
மாலின்தேவியோவென்ன மங்கையும்வந்தேன் வந்

கச்சணிந்தஉச்சிதமாம் மெச்சிடும்கொங்கையழகி
விசித்திரவடிவையொற்ற மெல்லியும்வாறேன் வந்

வன்மையுள்ளதேவனூரில் வாழுஞ்சிறுபாலனுன
ராமசாமிதமிழைப்பாடி நலமுடன்வந்தேன் வந்

சித்திரரேகை வசனம்

கேளும் தாதிமார்களா! எனது நாயகன் ஏதோ காரணமாக என்னை அழைத்திருக்கிருர். நாம் அவர் அருகில்சென்று தெரிந்துக்கொள்ளுவோம் சகிமாரே.

சித்திரரேகை தரு ஓாடிமெட்டு

மன்னுஉன்பாதமலர் போற்றிபோற்றி
மங்கைபணிந்தேன்மலர் சாற்றிசாற்றி ம

சித்திரசேனன் தரு

வந்தனம்புரிந்துநின்ற பெண்ணே பெண்ணே
விந்தையுடன் வாழ்ந்திடுவாய் கண்ணே கண்ணே வ

சித்திரரேகை தரு

எந்தனைஎனழைத்தீர் நாதா நாதா இன்று
சுந்தரிதனக்குரைப்பீர் வேதா நாதா எ

சித்திரசேனன் தரு அடதாளம்

விந்தையுள்ள்வனத்தைநாடி சுந்திரனும்போகவேண்டும்
எந்தனுக்குவிடையுங்கொடடி என்பெண்ணே கண்ணே
சுந்திரனும்சென்றுவாரண்டி

சித்திரரேகை தரு

எதற்காககானகத்துக்கு இன்பமுடன்போரசேதி
எனக்குஉரைக்கவேண்டுமே எனதுநாதா இப்போ
ஏந்திழைநானும்வாறேன் எந்தன்நாதா

சித்திரசேனன் தரு

காமதேனுவனத்தில் கண்டெடந்தராஜனுமோ
கடுங்கோபங்கொண்டு அடித்தானும் இடையர்களே
கடுங்கோபங்கொண்டு அடித்தானும்

கண்டுஅந்தராஜனைகொண்டுவந்து சிறையில்வைக்க
கனவேகமாய் சென்றுவருகுறேன் என்பெண்ணே கண்ணே
கனவேகமாய் சென்றுவருகுறேன்

### சித்திரரேகை தரு அடதாளம்

வனத்திலுள்ள வேடிக்கையை வஞ்சியாளும்பார்க்கவேண்டும்
வண்மையுடன் நானும்வாறேனே எனதுநாதா
வண்மையுடன் நானும்வாறேனே

### சித்திரசேனன் தரு

சமர்புரியபோகும்போது பெண்கள்வரலாமோபோடி
சல்தியுடன்வந்துசேருவேன் சமர்புரிந்து
தையல்உன்னை போலறிவேனே எனதுபெண்ணே
தையல்உன்னை போலறிவேனே

### சித்திரரேகை தரு

என்னை தனிக்கவிட்டு இப்படிநீபோரதென்ன
இதுஉனக்கழகல்ல மன்னவரே
ஒத்துயிருவருமாய் ஒருமித்துவாழ்ந்திருந்தோம்
ஒருத்தியாயிருப்பேனே மன்னவரே
கன்றைபிரிந்தபசு கதறிஅழுவதுபோல்
காரணம்நேர்ந்துதையோ மன்னவரே

### சித்திரசேனன் தரு

உந்தனைநான்விட்டுப்போக எந்தன்மனம்தாளுமோடி
உத்தமியேநீயும்வருகுவாய் வனங்கள்பார்க்க
சுந்திரமேநாமும் செல்குவோம்

### சித்திரசேனன் வசனம்

கேளும் பெண்ணே பிராணநாயகி! ராஜாக்கள் சமராகிய யுத்தத்திற்குச்சென்றால் அவ்விடம் ஸ்திரீகள் வரக்கூடாது அதற்காக தெரிவித்தேனே யொழிய வேறொன்று மில்லை. ஆகையால் உன் மனது பிரகாரம் ரதமேறி செல்லுவோம் வாரும் பிராணநாயகி.

### சித்திரசேனன் தரு

சிங்காரரதத்தினி லேறினேன் சித்திரசேனன்
சங்கதொனிதன்னை மீட்டினேன்
காடுவனங்கள் தாண்டினான் சித்திரசேனன்
காண்டீபத்தால்சப்தங் காட்டினான்
டங்காயோசைதன்னை மீட்டினான் சித்திரசேனன்
சண்டைசெய்யவே கோபமாகினான்

சித்திரசேனன் வசனம்

கேளும் பெண்ணே! நாம் ரதமேறி காமதேனு வனத்தைவந்து சேர்ந்தோம். ஆகையால் சற்றுநேரம் யிளைப்பாறி வனவேடிக்கை பார்த்து பின்பு அந்த ராஜனைத்தேடிப் பிடித்துக்கொண்டு போவோம் பிராணநாயகி.

பொது வசனம்

இவ்விதமாக சித்திரசேனன் பாளையம் இறங்கியிருக்க பெருந் திருவாளை துரியனைப்பார்த்து ஏதென்று சொல்லுகிறவிதங் காண்க.

பெருந்திருவாள் கவி

சுந்திரபிராணநாதா சொகுசுடன்நானுஞ்சென்று
அந்தமாய்குளத்தில்சென்று அரிவைநீராடவேண்டும்
சந்தோஷமாகநீரும் ஜல்தியாய்விடைகொடுத்தால்
பந்தமாய்நதிக்குச்சென்று பக்ஷமாய்வருகுவேனே.

வசனம்

கேளும் நாதா! நான் குளக்கரைக்குச் சென்று நீராடிவரவேண் டும் ஆகையால் விடைகொடுக்க வேண்டும் பிராணநாயகா.

துரியன் வசனம்

அப்படியே சென்றுவாரும் பெண்ணே பிராணநாயகி.

பெருந்திருவாள் தரு

தங்கையரேநாமெல்லோரும் ஜலத்திலாடுவோம்
தவராமலேதீர்த்தமாடி தையல்வருகுவோம்
அக்கமாரே ஆடைகளை ஒன்றாய்சேருங்கள்
அணிந்தபட்டாடைதன்னை அன்பாய் துவையுங்கள் த

தாதி தரு

அனைவருங்கூடியே அன்புடன்சென்றுமே
ஆதித்தன்ஒளியென்று எண்ணிடுவார் இந்த
அங்கராஜனும் நம்மைகண்டு மயங்கிடுவான் அ

சித்திரரேகை வசனம்

கேளும் நாதா! நான் இந்த குளத்திற்குச் சென்று குளித்து வருகிறேன். ஆகையால் விடைதந்து அனுப்பும் நாதா.

சித்திரசேனன் வசனம்

அப்படியே சென்றுவாரும் பெண்ணே பிராணநாயகி.

சித்திரரேகை கவி

குளத்திற்குவருகும்போது குமரியும்குளிக்கக்கண்டேன்
ஜலமிகும்குளத்தைநாடி தையலாள்வரவும்போமோ
திலக்கமாய்புருஷர்தம்மை துரோகமேசெய்தமாதர்
பலமுடன்வந்தசேதி பாவையாளறிகுவேனே.

சித்திரரேகை ஆனந்தக்களிப்பு

ஆகா இதுவென்ன ஞாயம் இப்போ
அடுக்குமோமாதர்கள் செய்தவனியாயம்

ஓகோ இதைஎண்ணிப்பாரும் எந்தன்
உத்தமிமார்களே இதற்குபதில்கூறும்

அகங்கொண்டு இவர்வந்ததாலே இப்போ
அனைவோருமறியபங்கம் செய்வேனொருக்காலே

பாங்கானமொழியாளே வாராய் இந்த
பாவையர்களைமேலேசாய் விடுவேனோபாராய்

விரைவுடன் நாமுமேசென்று அந்த
வித்தகிமார்களை கேட்போமேயின்று தனதந்

சித்திரரேகை கவி

என்னடிசக்களத்தி இறுமாப்புகொண்டுநீயும்
கன்னிநான்வருகுமுன்னே கலக்கினீர்ஜலத்தையெல்லாம்
அன்னீதவேலைசெய்த அரிவையேஉன்னைநானும்
பின்னையும்தெண்டிக்காமல் பேதையேவிடுவேனோ.

வசனம்

கேளடி சக்களத்தி! தேவமாதர்கள் குளிக்கும்படியான குளத்தில் பூலோக ஸ்திரீகள் குளிக்கக்கூடாதென்று தெரிந்திருந்தும் நீ வந்து குளித்தபடியால் உன்னை சும்மா விடுவதில்லை வாடி சக்களத்தி.

பெருந்திருவாள் கவி

விடுவேனோஎன்றுரைத்த வேசியேகேளாய்நீயும்
கொடுமைகள்செய்தாப்போல கூசாமல்பேசவந்தாய்
தடுமாரிவார்த்தைச்சொல்லும் தையலேவிபரமாக
கெடுதியையின்னதென்று கிரமமாயுரைத்திடாயே.

வசனம்

அடி வாடி மாதே! நான் என்ன அஸ்தினபுரத்தையாளும் துரியோதன மகாராஜனுடைய பாரியாளென்று மதிப்பில்லாமல் பேசுகின்றாய். உன்னை நான் இனி சும்மா விடமாட்டேன் வாடி சவுத்தி.

சித்திரரேகை தரு

கெட்டிக்காரத்தனம் பேசாதே உன்னை
விட்டுவிடுவேனென்று வீசாதே
பட்டிப்போலவேவார்த்தை கொட்டிக்குலைக்காதேடி
பற்றிசடையைகையால் சுற்றிக்கொண்டேனேவாடி கெ

பெருந்திருவாள் தரு

அலிக்கிகுலுக்கிவந்து நீட்டாதே உந்தன்
அதிகாரவீரத்தை காட்டாதே
இப்போதுஉன்னிட எண்ணத்தையறிவண்டி
இறுமாப்புகொண்டுநீ பெருமைகொண்டலையாதே அ

சித்திரரேகை தரு

கணவன்வருவானென்று மலைக்காதே சும்மா
கண்டித்துஉன்வார்த்தையை நிலைக்காதே
மணவாளன்வந்திங்கே மரித்தாலும்விடுவேனோ
துணிவுடன்நீயுமே துண்டியேவந்தியோ க

ஓரடி தர்க்கம் தரு

பெரு என்னடிவீசுறாய் சிரிக்கி அடி சிரிக்கி
சித் எதிர்த்தேண்டிபேசுறாய் முரிக்கி அடி முரிக்கி
பெரு கொண்டையைஅறுப்பேண்டி குலிக்கி அடி குலிக்கி
சித் கூந்தலைவைப்பேனே பலிக்கி அடி பலிக்கி
பெரு மாராக்கைதொட்டேனே சிரிக்கி அடி சிரிக்கி
சித் மடியைப்பிடித்தேன்வாடி முரிக்கி அடி முரிக்கி
பெரு எட்டிஅடித்தேண்டி தாடையில் அடி தாடையில்
சித் எதிரிட்டடித்தேண்டி பாதகி அடி பாதகி

பொது வசனம்

இப்படி இருவரும் சண்டை போட்டுக்கொண்டிருக்கும்போது துரியோதனன் ஏதென்று சொல்லுகிறவிதங் காண்க.

துரியன் தரு

ஆரடிநீஎந்தஊரடிநீ அறியஉரைப்பாய்உந்தன்பேரடி
ஊரையும்பேரையும் உண்மையாய்சொல்லாவிட்டால்
தாறுமாறாகவே தையலேயிழுத்தேனே ஆ

O - 2 NRN, A
N47



## சித்திரரேகை தரு

ஊரதைகேழ்க்குறாய் ராஜனே அடா ராஜனே
உற்றதைசொல்குறேன் துரியனே அடா துரியனே
தேவலோகத்தையாளும் தீராம் சித்திரசேனன்
அவரிடதேவியென்று யாவரும்அறிவார்கள் ஊ

## துரியன் தரு

என்னமொழிசொல்லவந்தாய்நீ மாதே அடி மாதே
ஏற்காதுஎந்தனுக்கு மானே அடி மானே
உந்தனைசேராமல்ஒகோ நான்விடமாட்டேன்
உள்ளத்தில்அன்புவைத்து உன்னைவிடுவதில்லை எ

## சித்திரரேகை தரு

ஐயையோ இதுஎன்னவிதியோ எனக்கு
ஆர்செய்தார்போதனைசதியோ
மெய்பாகஇல்லறத்தில் மேன்மையாயிருக்காமல்
பையவேநானுமே வனமதுவந்தேனே அ

## பொது வசனம்

இவ்விதமாக துரியன் சித்திரரேகையை இழுக்க சித்திரரேகை அபயமிட அபயஸ்தம் காதில் கேட்டு சித்திரசேனன் ஏதென்று சொல்லுகிறவிதங் காண்க.

## சித்திரசேனன் தரு

அதிவேகமாக வந்தான் சித்திரசேனன்
ஆரடாஇல்லென்று மீறியகட்டி
எதிரில்லாரணசிங்கம்போல

ஏகியேகெர்ச்சனை கொண்டிங்கேவாரான்
கிடுகிடென்றதிரவேமீறி கெக்கலிகொட்டியே

உக்ரமுடனேகூவியே பல்லைக்கடித்து இவன்
குடலைபிடுங்குவேன் என்றுமேஉரைத்தான் தத்த

## பொது வசனம்

இவ்விதமாக போர்கோலம் கொண்டுவந்த சித்திரசேனனை துரியன்பார்த்து ஏதென்று சொல்லுகிறவிதங் காண்க.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. ______

## துரியன் தரு சண்டை

மதத்தயானைபோல யெதிர்த்தான் பல்லைக்கடித்து
மார்பினில்எட்டியே அறைந்தான்



102648

குதித்தவீரசிங்கம்போல் எதிர்த்துவில்லேவளேத்து
கோரமுள்ளபாணங்களால் சூரவித்துபோலெறிந்தான் மது

சித்திரசேனன் தரு

மண்டியிட்டுஎதிரில் குதித்தான் கையைமுடக்கி
வல்லுலக்கைபோல யிடித்தான்
கொண்டல்போலவில்வளேத்து கோதண்டத்தில்பாணம்தொடுத்து
அண்டர்களும்தான்புகழ சாரதிதலேயறுத்தான் ம

துரியன் தரு

எரிமழுசூலம் விடுத்தான் துரியபூபன்
ஏகசக்கரபாணந் தொடுத்தான்
உக்ரமுள்ள அக்கினியும் கக்கியேவருகுதுபார்
திக்கெனகொளுந்திவர பக்குவமாயெதிரில்கண்டான் எ

சித்திரசேனன் கந்தார்த்தம்

மட்டில்லாசேனேசூழ வந்தெங்கள் இடையர் தன்னே
சட்டமாய்வந்துநீயும் சமரதுசெய்ததாலே
வெட்டினேன்விருதையெல்லாம் வீரங்கள்கொண்டுமீறி
கொட்டியேயுனேபிடித்து,

தரு

கொடிகம்பத்தோடே கட்டினேன் பாருமீதே
கொடிகம்பத்தோடே கட்டினேன்
மடிக்கயுத்திரமுண்டு வலுகூறவந்தாயே
இடிகேட்டநாகம்போல ஏங்காதேசோங்காதே கொ

துரியன் சொல் தரு

என்னசெய்குவேன்ஐயோ . இந்தஉபவார்த்தைக்கு
இதற்கோநான்வனம் வந்தேன் அண்ணுவே
அங்கம்பதரியே அலேயுதேஎந்தனுவி
அரசன்எனேவாட்டுரான் அண்ணுவே
கண்டோர்நடுங்கிடவே காளருத்திரன்போல
கடுங்கோபங்கொண்டுவாரான் அண்ணுவே எ

சித்திரசேனன் தரு

அண்டரண்டங்களெல்லாம் கண்டுஎனேவணங்க
அதட்டிஅதட்டி அடித்தேன் துரியனேநான்
பதட்டமாகவே இடித்தேன் அ

### சூரியன் புலம்பல்

ஐயையோநானிந்த அரசன்கையில்சிக்கினேன் ஆதிமூலமே
அச்சுதனேஎந்தன் ஆபத்தைதீர்ப்பாய்நீ ஆதிமூலமே
பச்சமேனியனே பாவிநான்வாடுறேன் ஆதிமூலமே
கச்சனிகோபியர் கன்னியர்மணவாளா ஆதிமூலமே
காசாம்புமேனியா கவலையைமாற்றுவாய் ஆதிமூலமே

### சித்திரசேனன் தரு

வாடாசூரியனே உந்தனைவாட்டியே
தெய்வலோகம் கொண்டுவிடுவேன்

ஈடாஎனக்குநீதான்சீச்சீ ஏகிடுவாய்எந்தனுடன்வேகமுடனே
சுருள் எதிர்த்துமீறியே சூரனரத்தத்திலழகுடனே
குறித்துசேனைகளையும் பார்த்துஅழுகலுற்றான் வா

### சூரியன் புலம்பல் தரு

பெண்ணேபெருந்திருவே என்மனம்வேகுதடி
பெருந்துயர்வாடலானேன் கண்மணியே

பாவியந்தசித்திரசேனன் படுத்தும்துன்பம்நான்சகியேன்
பாவையரேஎன்னசெய்வேன் கண்மணியே

அண்டகிழவுமில்லை ஆதரிப்பாராருமில்லை
ஐயோநான்என்னசெய்வேன் கண்மணியே பெண்

### பெருந்திருவானை தரு

நாதாமனதுவாடாதீர் நான்முகன்விதித்ததை
யாரென்னசெய்யலாம்

வாதாவனந்தனிலே வந்துஅகப்பட்டோமே
சுருள் என்னிடநாதனே குன்னிவாடாதீர்
அண்ணலின்செயலன்றி ஒன்றுநாடாது நா

### சூரியன் புலம்பல் தரு

வீரசூரமும்போச்சுதே வெற்றிவிருதுபோய்
கத்திஅழுதுவாட லாச்சுதே

ஆரவாரமும்போய் அடங்கிஇருக்கலாச்சே
சுருள் ஆதரவில்லையே அரிவையேஎன்செய்வேன்
ஆசையும்வீரமும் அதிகமாய்போச்சுதே வீர

### சித்திரசேனன் தரு

தலைதனில்உதைத்தேன் சூரியனிட
தவடையிலடித்தேன்

சினங்கொண்டுஅவனிட தேவியையிழுத்துமே
சிதரவேரதமதை பரிவுடன்ஓட்டினன் சித்

துரியோதனன் புலம்பம்

அபயஅபயமையா அண்ணாதர்மநந்தனா
இந்தஅவதிக்குளென்னசெய்வேன் அண்ணாவே

தம்பிமதவீமனே தாளவில்லையேநெஞ்சம்
தவித்துப்புலம்பலானேன் வீமசேனா

பரமனிடத்தில்நீயும் பாசுபதத்தைப்பெற்ற
பார்த்தீபாவந்துகாரும் என்தம்பியரே

அருமைநகுலசகா தேவரேநீங்கள்
வந்துஎன்னை ஆதரிக்க வேண்டுமோடா தம்பியரே

தேடிஎந்தனையாரோ தேர்க்கொடிகம்பத்தில்கட்டி
அவன்தெய்வலோகம் கொண்டுபோரான் அண்ணாவே அ

பொது வசனம்

இவ்விதமாக துரியோதனனை சித்திரசேனன் தேர்க்கொடி கம்பத்தில் கட்டி இழுத்துக்கொண்டு போகிறபோது தர்மராஜனையும் தம்பிமார்களையும் நினைத்து புலம்புகிறபோது தர்மனந்தனர் கொலுவுக்கு வருகிறவிதங் காண்க.

தருமர் வருகிற கவி

துரியனவன்சானகத்தில் துரிதமாய்புலம்பும்போது
அதுவிபரம்அறியவேண்டி அழகுள்ள தர்மர் தானும்
சடுக்கெனஎழுந்திருந்து தையலைதனிக்கவிட்டு
அதுவிதம்அறியவேதான் அவசரமாய்வருகின்றாரே.

தருமர் தரு

சத்தியதர்மபூபதிவந்தார் நல்லதிருமுகமழகிய
சத்தியதர்மபூபதிவந்தார்

சத்தியதர்மனும்வந்தார் எத்திசைமன்னர்கொண்டாட
பத்தியாகதம்பிமார்கள் சுற்றிலும்நெருங்கிசூழ

சுருள் பாரியமணிமுடி வீரியனென்ன
பாண்டுவின்புத்திரனும் வனமதைநோக்கி சத்

அடதாளம் சாப்பு

தாளங்கின்னரி மேளங்கொட்டிடவே தனல் தனல்
டங்காநாதசுரங்கள் ஊதிடவே தமூர் தமூர்

காலில்வண்டையங் கலகலென்றிடவே கணீல் கணீல்
கனத்தமார்பினில் பதக்கமாடிடவே மிணீல் மிணீல்
அரம்பைஊர்வசிமாதர் அருகில்நடனமாட
அருகில்தம்பிமார்களும் அன்பாய்சாமரைவீச சத்

பொது வசனம்

இந்தப்பிரகாரமாக தர்மராஜனுமவர் தம்பிமார்களுடன் பர்ணசாலையில் வீற்றிருக்கும்போது துரியோதனன் சித்திரசேனனிடம் கட்டுப்பட்டு தேர் ஆகாயமார்க்கத்தில் போகும்போது சித்திரசேனன் அடித்துக்கொண்டு போகிறவிதங் காண்க.

சித்திரசேனன் தரு

விட்டுவிடுவேனென்று கட்டாய்ம்பேசுருய்
ராஜனே அடா ராஜனே
வீரன்நீ ஆனாலும் ஜெயித்திடலாகுமோ
ராஜனே அடா ராஜனே
பிடித்தப்பிடியோடே பின்கட்டாய்க்கட்டினேன்
ராஜனே அடா ராஜனே
என்னிடதந்தைமுன் இப்பவே உந்தனைகாட்டுவேன்
ராஜனே அடா ராஜனே
உந்தனைநான்வாட்டாமல் விடுவேனோ
ராஜனே அடா ராஜனே

பொது வசனம்

இவ்விதமாக சித்திரசேனன் அடித்து இழுக்கிறபோது துரியன் புலம்புகிறவிதங் காண்க.

துரியன் தரு

அடிக்காதீர் அடிக்காதீர் ராஜமன்னனே நான்
அடிபட்டராஜனல்ல ராஜமன்னனே
அஸ்தினபுரியையாளும் ராஜமன்னனே
அரசன்துரியனுச்சுதே ராஜமன்னனே அ

சித்திரசேனன் தரு

இந்திரன்புரவியை தந்திரமாகவேதட்டினேனே
என்னிடசமர்த்தினல் உன்னையும் இப்பவேகட்டினேனே எனக்கு
எதிரியாய்வருவோரை இன்னும் நொடிக்குள்ளேவாட்டுவேனே
இன்பமாய்தந்தைமுன் இப்பவேஉந்தனைகாட்டுவேனே இ

வசனம்

அடா வாடா ராஜனே! உன்னை தேவலோகம் கொண்டுபோய் தந்தைமுன் காட்டாமல் விடுவதில்லை சும்மா வாரும் ராஜனே.

துரியன் புலம்பல்

அண்ணா தர்மநந்தனா அபயமபயமையா என்னை
ஆதரிக்கவேண்டுமையா தர்மநந்தனா
பாவியிவன்கையில்சிக்கி பதைத்துத்துடிக்கலானேன்
பாதுகார்க்கவேண்டுமையா தர்மநந்தனா
அஸ்தினபுரத்திற்கிப்போ அழைத்துப்போகவேணுமென்று
ஆரண்யம்ஓடிவந்தேன் தர்மநந்தனா
ஆரோஒருராஜனவன் அடித்துஎனைப்பிடித்து அவன்
அநியாயமாய்கொண்டுபோமுன் தர்மநந்தனா
பத்தினிதுரௌபதையைப் பார்க்கவேண்டுமென்றுநானும்
பக்ஷமுடன்ஓடிவந்தேன் தர்மநந்தனா
ஆசையுள்ள தம்பிமார்கள் அனைவரையும்பார்க்க
அழகாகஓடிவந்தேன் தர்மநந்தனா
இந்தவேளைவராவிட்டால் எந்தன்உயிர்போகுமையா
இதற்குநான்என்னசெய்வேன் தர்மநந்தனா அ

தருமர் கவி

பெருமையென்தம்பிமாரே உத்தமசாலிகேளீர்
இருதயகுடியில்வாழ்ந்து இருந்திடும்துரியன்தன்னை
வனந்தனில்ஆரோராஜன் மகிழ்வுடன்கட்டிபோமுன்
அதுவிபரம்அறியவேண்டும் அர்ச்சுனனைஅழைத்துவாரும்.

வசனம்

கேளும் தம்பி வீமசேனா நான் அழைத்ததாக அர்ச்சுனனிடம் தெரிவித்து அழைத்துவாரும் வீமசேனா.

பொது வசனம்

அஃதெப்படி என்றால் இவ்விதமாக தருமர் அர்ச்சுனனை அழைக்க அர்ச்சுனன் வருகிறவிதங் காண்க.

அர்ச்சுனன் வருகிற கவி

அரன்தன்னைமறவாசீலன் அருளியபடிநடக்க
பரந்தாமன்அருளினாலே பாரதம்நடத்தும்தீரன்
கரந்தனில்சிலையுமேந்தி கனகபூஷணங்கள்துன்ன
தருமரும்அழைத்தாரென்று தனஞ்செயன்வருகின்றேனே.

அர்ச்சுனன் தரு

அஷ்டதிசைகளெல்லாம் கண்டுஎனைவணங்க
ஆதிமாயன்பாதங்கோரியே அர்ச்சுனராஜன்
அதிவிரைவாய் வந்துமேவினேன்

எத்திசையும்கெடிபெற்ற இளஞ்சிங்கம்போலவேதாண்டி

சுருள் இலகியமாமணி கலகலவென்றிட
சிலரணபேரிகை உலகமுஅதிர்ந்திட அஷ

சித்திரசிலையுமேந்தி சீராப்பாணங்கள்பூட்டி
ரத்தினசிகைதுலங்கவே அர்ச்சுனராஜன்
நமன்போலவந்துமேவினேன்

சுருள் நாடியேவீரம் கூடியேவருகவும்
பாடிடதம்பூரு வீணைமுழங்கவும் அஷ

ஐவர்களுக்குகந்ததீரன் அமர்களத்திலிவனேவீரன்
மெய்மொழிதவருசீலனும் அர்ச்சுனராஜன்
மேன்மையுடன்வந்துமேவினேன்

அண்ணன்அழைத்தவிதம் தன்னையறிவோமென்று
அதிதுரிசாய்வந்துமேவினேன் அர்ச்சுனராஜன்

சுருள் அண்டரெண்டமென கண்டுநடுங்கிட
மண்டலத்தோர்களும் வந்துவணங்கிட அஷ

வசனம்

ஆனல் கேளுமப்பா மந்திரிமார்களே! என் தமயனுக்கு நான் வந்திருப்பதாக தெரிவித்துவாரும் மந்திரியே.

அர்ச்சுனன் தரு

அண்ணுசருணம்உமதுபாதம் அண்ணுசருணம்
அண்ணுஉமதுபாதம் அடியினைபோற்றினேன்
நண்ணுகவேதுதிநான் செய்தேன்கண்டுமே அ

தருமர் தரு

வந்தனம்புரிந்ததம்பியே சுகமாகநீவாழ்வாய்
வந்தனம்புரிந்ததம்பியே

இவ்வுலகமதில் உனக்குஎதிரியுண்டோ
சுருள் என்னிருதம்பியே உன்னிதமாகவே
நண்ணயமாகவே நான்வாடலானேன் வந்

அர்ச்சுனன் தரு அடதாளம் சாப்பு

என்னுமனக்குறையண்ணு எந்தனுக்குஉரைசெய்யும்
சந்தேகமில்லாமலே சாற்றுவீர்எந்தனுக்கு

சுருள் அண்ணுஅந்தவிபரம் நன்றாயுரைக்கவேண்டும்
கண்ணனிருக்கும்போது அண்ணுநாம்குண்ணலாமோ

தருமர் தரு

ஐயோநான்என்னசெய்குவேன் என்மனதுவாடுதே
ஐயோநான்என்னசெய்குவேன்
ஐயோநான்என்னசெய்வேன் அரசாளும்துரியனை
சுருள் ஆரோஒருஅரசன் தீரமாகாதத்தில்
வீரமுடனேகட்டி மீறியேசெல்கின்றானே ஐ

அர்ச்சுனன் தரு

பாரவனத்தில்ஓட்டினான் துரியனவன்
பாரவனத்தில்ஓட்டினான்
பாரவனத்தில்ஓட்டி படித்தினபாடறிந்தும்
தீரன் துரியனையும் சிந்தையில்நினைக்கலாமோ பா

தருமர் கவி

என்சொல்லைதெடுக்கவேண்டாம் என்னிடதம்பிகேளாய்
அஞ்சாமல்ஏகிநீயும் அரசனைபோர்புரிந்து
துரியனைஜெயமடைந்த துரோகியைநீயும்கொன்று
சடுதியில்எந்தன்முன்னே தனஞ்ஜயாவருகுவாயே.

வசனம்

கேளும் தம்பி அர்ச்சுனா! நீ விரைவாகச் சென்று அந்த அரசனிடம் போர்புரிந்து துரியனை மீட்டுவந்தால் ஆய்விட்டது. இல்லாவிட்டால் இவ்விடத்தில்தானே என் உயிரை மாய்த்துக்கொள்வேன் தம்பி அர்ச்சுனா.

அர்ச்சுனன் தரு

தமையனிடத்தில் விடைபெற்றுமே அர்ச்சுனராஜன்
தாவிவனத்தை நாடிவாரானே
சிந்தையில் சந்தோஷங்கொண்டுமே அர்ச்சுனராஜன்
விந்தையுடன் ஓடிவாரானே தந்தான

வசனம்

கேளும் மந்திரிமார்களே! நாம் நமது தமையனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு ரதமேறி சமருக்கு செல்லவேண்டும் மந்திரியே.

அர்ச்சுனன் நொண்டிச்சிந்து

சித்திரரதத்தினில் ஏறினேன் சினமிகுந்து
உக்ரகோபங்கொண்டு மீறினேன்
ஆக்ரமித்துகோப மீறினேன் கோடையிடிபோல்
மிக்கசரங்களை யேவினேன்

பார்க்குறேன் அவனைநானும் நிமைபொழுதில்
பஞ்சுபஞ்சாகவே வாட்டிடுவேன்
எளிதங்கள் செய்தானு நானென்று
என்னையடித்திடவும் வல்லமையுண்டோ
சண்டமாருதம்போல கோபமீறி
சமருக்குவந்தேனிதோ எதிர்த்துவாடா தங்

பொது வசனம்

இவ்விதமாக அர்ச்சுனன் ரதம்விட்டு வருகும்போது தூரியன் பெருந்திருவானையைப் பார்த்துச் சொல்லுகிறவிதங் காண்க.

தூரியன் தரு

தேவலோகம்கிட்டி தேரதுவருகுதே பெண்மயிலே
சிந்தையும்வாடுதே என்னநான்செய்குவேன் கண்மணியே
பஞ்சவர்க்குஎன்மேல் பக்ஷமுமில்லையோ பெண்மயிலே
பரிவுடன்பார்த்துமே விபரமாய்சொல்லிடு கண்மணியே

பெருந்திருவாள் தரு

சொல்லமனம்வல்லையே சுந்திராஎன்னசெய்வேன் பிராணநாதா
கண்டந்தராஜனும் கதரிடவாட்டுருன் பிராணநாதா

தூரியன் தரு

ஐயோபஞ்சவர்களே அவதிக்கிஎன்னசெய்வேன்
ஆதரிக்கவேண்டுமையா பஞ்சவரே
வாய்விட்டழுவோமென்றால் வாய்மேல்அவன்அடித்து
வருத்தப்படுத்துருனே பஞ்சவரே ஐ

அர்ச்சுனன் கவி

தேர்தன்னை திருப்பிப்பார்த்தான் சண்டமாருதம்போல்சீறி
கார்மேகவண்ணன் தன்னைக் கருத்தினில்நிலைநிறுத்தி
பார்புகழ்மன்னரஞ்சப் பராக்கிரமங்கொண்டுமீறி
சிர்பெருங்காண்டீபத்தால் செயகண்டிமுழக்கினேனே.

சித்திரசேனன் கவி

ஆரடாவனந்தனிலே அஞ்சாமல்டங்காஓசை
பாரடாஅவனையிப்போ பதைக்கவேவாளினாலே
கூரடாஇன்னானென்று குவலையத்தோர்களஞ்ச
தோரடாநிமைநேரத்தில் சிதைக்கவேமடிப்பேன்பாராய்.

வசனம்

அடாவாடா சூரனே! நீ என்ன கொஞ்சமாகிலும் மதிப்பில்லாமல் சண்டைக்கு வந்தபடியால் உன்னை சும்மாவிட போறதில்லை எதிர்த்துவாடா தீரனே.

அர்ச்சுனன் தரு

கிலையதுஎடுத்தேன் உன்னிடவீரம்
குலையவேமடிப்பேன்
அலைகடலுலகெங்கும் மலையும்கிடுகிடென்ன
நிலையும்மதிமயங்க கலையும்ரதமுந்தூளாய் கி

சித்திரசேனன் தரு

தனுவதைஎடுத்தேன் மேவியேபாணம்
உனைவெல்லவிடுத்தேன்
பனைகொடிபரிதேரும் துணிக்கசாரதிவிழ
சினைக்கும்சரங்களேவி கண்டித்திடவேண்டி
சுருள் சிதரபடைகளை அதரபூமியும்
உதிரகிரணமும் பதறவாட்டுவேன் தனு

அர்ச்சுனன் தரு

பதரியேவாடா படைகளெல்லாம்
சிதறியேஓட
சதமாகும்மிதமில்லா ரதங்கள்பரிகள்கோடி
அதமாகவிதமான சகலசரங்கள்தொட்டு
சுருள் அடரும்படைகளும் முடிகள்பொடிபட
துடரும்சனியனுல் இடருசெய்யவும் பத

சித்திரசேனன் தரு

உரமிகவாட அமோகபாணம்
சரமிகஜாட
குறைகடலெனபேரி நிறையவிருதுடங்கா
அறையடமரம்பூரி தரையும்கிடுகிடென்ன
சுருள் அண்டபுவனமும் மண்டிசரமது
கொண்டுவிறையவும் சண்டைமிகுத்திட உர

அர்ச்சுனன் கவி

பன்னகபணிசயனன் பயந்தொடுங்க
பாரதவம்விட்டோட முனிவரெல்லாம்
முன்னுகமாருதியும் எதிர்த்தார்போலும்
முப்புரத்தைபரமசிவன் தகிர்த்தார்போலும்
இன்னுளில்உந்தனைநான் எதிர்த்துக்கொண்டேன்
இருவருமே சேனதிபதிகளென்று
பொன்னுடர்மெச்சிடவே சரமெடுத்தேன்
பூட்டியேஒருநொடிக்குள் வாட்டுவேனே.

## அர்ச்சுனன் வசனம்

அகோகேளும் சித்திரசேனு! அரவாபரணன் அரவசயனனுகிய அரன் அரி பிரமாதிகளும் பயங்தொடுங்கவும், தபசிகளெல்லாம் தவம்விட்டோடவும், மாருதியும் ஆதிசேஷனும் எதிர்த்தாற்போலும், முப்புராதிகளை பரமசிவன் நகைத்தெரிந்ததுபோலும், இப்போது உன்னை எதிர்த்துக்கொண்டேன். நாமிருவரும் சேனுதிபதி என்று பொன்னுலகோர் மெச்சும்படி சரமெடுத்து உன்னை க்ஷணப் பொழுதில் வாட்டுவேன் பாரடா சித்திரசேனு.

## சித்திரசேனன் தரு

வீரனேவாடா அதிகபலசூரனேபோடா
தாஷ்டிகமில்லாமல் தாண்டிக்குதிக்காதே
சுருள் ஜாடவேசேனை ஓடவேநீயும்
வாடவேநான்வகை தேடாமல்விடுவேனே வீர

## அர்ச்சுனன் தரு

சூரகெம்பீரவீர வார்த்தைசொல்லியேதீர
சாரமேதுசும்மா சமர்த்துக்கள்பேசாதே
சுருள் ஜாடுவேன் துண்டா போடுவேனிப்போ
கேடுகாலம்வந்து கூடுவதறியாயோ சூர

## சித்திரசேனன் தரு

பதரியேவாடபடைகளெல்லாம் சிதரவேபோடா
அதிரபூமிகளெல்லாம் அருஞ்சரம்தனைமீட்டி
சுருள் அடக்கவேஎல்லாம் நடக்கவேஇப்போ
சடுக்கெனபகை முடிக்காமல்விடுவேனே பத

## அர்ச்சுனன் தரு

கிட்டிநீவாடா இருதுண்டாய் வெட்டுவேன்போடா
மட்டில்லாகணையேவி மடிக்காமல்விடுவேனே
சுருள் மாத்தவேபாணம் தூத்தவேஉன்னை
கூத்தனுகவே ஏத்துவேகமன்பதி வெட்

## சித்திரசேனன் தரு

கண்டவர்நடுங்க எடுப்பேன் வீரவாளியே
கொண்டுமேசித்திர அடிப்பேன்
அண்டமும்குலுங்கிடவே தண்டமும்கைவாங்கிடவே
சண்டனும்மதிகலங்க பண்டுசூரன்நின்றிடவே க

## அர்ச்சுனன் தரு

என்னிடக்கைவில்லை எடுத்தேன் அமோகமாக
பின்னிடும்படிக்கி அடித்தேன்

மின்னியரதத்தினுலே உன்னிடகவசமு
தலையுமுடித்திடவே சொன்னசொல்முடிப்பேனிப்போ எ

சித்திரசேனன் கந்தார்த்தம்

மண்டலமன்னர்வாட மதகரிபரிகள்சேனை
துண்டுதுண்டுகளாக துளைத்துஉன்விருதைஎல்லாம்
கண்டவர்நடுங்கிவாட காலருத்திரனைப்போல
சண்டன்வந்தனுகஉன்னை,

தரு

ஜாடுவேன்பாராய் உந்தனுயிரை
போக்குவேன்நேராய்
வாக்குவாதங்கொண்டு வந்திங்கேதுள்ளாதே
போக்கிரிபயலேஉன் பெயரதைசொல்லடா ஜா

அர்ச்சுனன் கந்தார்த்தம்

குணத்தொனிதன்னைபூட்டி கொக்கரித்தெழுந்துசீரி
க்ஷணத்தினில்உன்னை இப்போ சமர்செய்துமடிப்பேனென்று
என்னிடபேரைகேழ்க்கும் இணையில்லாபாணம்உன்மேல்
உன்னிதபாணம்பூட்டி,

தரு

ஏவினேனே அஸ்திரம்கோடி
தாவினேனே
ஏவினேன் அஸ்திரம் இமையவர்நடுங்கிட
ஏகபோகமாக தேவர்மனதுவாட ஏ

சித்திரசேனன் கந்தார்த்தம்

அக்கினிபொரிபறக்க அனல்போலகோபமீறி
திக்கெல்லாம்நடுநடுங்க தினகரனுக்ரமித்து
சக்கையாய்உன்னைவாட்டி சமரினில்மடிப்பேனென்று
உக்கிரகோபங்களோடு,

தரு

ஓங்கியே அஸ்திரமெடுத்தேன் பாணங்கள்கோடி
தாங்கியே உந்தன்மேல்விடுத்தேன்
போங்காலம்வந்துநீ போர்செய்யவந்தாயோ
தேங்காமல்உந்தனிட தந்தையின்பெயர்சொல்லும் ஓ

அர்ச்சுனன் கந்தார்த்தம்

என்னிடபேரைகேழ்க்கும் எழிலுள்ளசிறுவாஉன்மேல்
கண்டோடவில்லைபூட்டி கடுஞ்சினம்மிகவேகொண்டு

தண்டமுமதனுவைவாங்கி சரமாரிபொழிந்தாற்போல
அண்டகோளங்களெட்ட,

தரு

அஸ்திரபாணமெடுத்தேன் அமோகமாக
விஸ்தாரமாய்ப்பாணந்தொடுத்தேன்
அஷ்டாக்ஷரமந்திரம் ஆயிரத்தெட்டுஞ்சொல்லி
கஷ்டமில்லாமலே காண்டீபதொனிபிடித்தேன் அ

அர்ச்சுனன் வசனம்

அடாவாடா சிறுவனே! இந்த பாராகிய பிரபஞ்சத்தில் என்னை ஜெயிப்பவர் ஒருவரும் இல்லை. ஆகையால் உன்னை கொல்வோமென்றால் மனதுவரவில்லை உன்னுடைய தந்தையின் பெயரை தெரிவித்து பின்னால் சண்டைசெய்யலாம் பாலகா.

சித்திரசேனன் கவி

தந்தையின்பேரைகேழ்க்கும் தனுவுள்ளமன்னகேளாய்
அந்தமாய்தேவலோகத்தை அடைவுடனரசுசெய்யும்
விந்தைசேர்இந்திரபூபன் விரைவுடன்மகிழ்ந்தளித்த
எந்தன்பேர்சித்திரசேனன் எதிர்த்துமேசண்டைசெய்வாய்.

வசனம்

கேளும் அரசனே! என்னுடைய தந்தையின்பெயர் தேவேந்திர மகாராஜனாகும். ஆகையால் இனிமேலாகிலும் சமராகிய யுத்தியம் செய்யலாம் அரசனே.

அர்ச்சுனன் தரு

வாரும்வாரும் எந்தன் தம்பியே அடா
வல்லமையில் மிகுந்ததம்பியே
பாரும்பாருமிப்போ பட்சமுடனேநாமும்
பரிவுள்ள அண்ணரிடம் பாசமாய்செல்லுவோம் வா

சித்திரசேனன் தரு

எந்தகாரணத்தினால்ராஜனே நீர்
எந்தனை தம்பிஎன்றாய்ராஜனே
அந்தமுடனேஇப்போ அறிவிப்பாய்இன்னதென்று
சந்தேகமில்லாமலே சாற்றுவாய்இன்னதென்று

அர்ச்சுனன் தரு அடதாளம்

ஐவரில்நடுப்பிறந்தோன் அர்ச்சுனன்எந்தன்பெயர்
அரசாளும்தேவேந்திரன் அவரிடசெல்வனாகும்

ஆஹாளனக்குதப்பிநீ ஆருமேசித்திரசேனு
அந்தமுள்ள துரியனையும் அண்ணனிடம்கொண்டுசெல்வோம் ஐ

சித்திரசேனன் தரு

ஐயோநமது தந்தை அழைத்துவரச்சொன்னுரே
அவரிடவாக்குபடி அழைத்துநாமும்சென்றிடுவோம்
தந்தையிடம்காண்பித்து தமையனிடத்தில்செல்வோம்
சந்தகமில்லாமலே கொண்டுசெல்வோம்அண்ணனிடம் ஐ

அர்ச்சுனன் வசனம்

கேளும் தம்பி சித்திரசேனு! நமது அண்ணனுகிய தரும ராஜன் துரியோதிரன் அபயமிட்ட குரலைக்கேட்டு என்னையழைத்து யாரோ ஒரு அரசன் வந்து துரியனை கட்டிக்கொண்டு போகிறுன். ஆதலால் நீ சென்று அந்த ராஜனை வெற்றிபெற்று துரியனை மீட்டு வராதாலாய்விட்டது. இல்லாவிட்டால் என் பிராணன் இங்கேயே போய்விடுமென்று தெரிவித்தார். ஆகையால் நாம் அண்ணரிடம் காண்பித்து பிறகு தேவலோகம் செல்வோம் சித்திரசேனு.

பொது வசனம்

இருவரும் மனம் ஒத்து தருமரிடம் வருவது.

அர்ச்சுனன் தரு

நடப்போம்வாரும் வனத்தைநோக்கி
நடப்போம்வாரும்
நடப்போம்வாருமிந்த நானிலம் புகழ்ந்திட
அடர்ந்தவனமும்குண்ணும் அதிர்ந்திடவேகமாய் ந

அர்ச்சுனன் கவி

என்னிடஅண்ணுஉந்தன் இணையடிபோற்றிபோற்றி
மன்னனும்நானுமாக மல்யுத்தம்செய்தபோது
பின்னமில்லாமல்தந்தை பேரதைசொன்னபோது
அண்ணனே தங்களிடம் அழைத்துமேவந்தேனிப்போ.

தருமர் துரியோதிரனை எதற்காக வனம் வந்தாய் என்று கேட்டபோது துரியோதிரன் சொல்வது

துரியன் புலம்பல்

ஐயோநான்என்னசெய்வேன் ஆரண்யம்தன்னில்வ:ர
இந்தஅவதிவந்து நேர்ந்ததையோ அண்ணுவே
கண்ணுனதம்பியரை காணவேவேண்டுமென்று
கானகம்நாடிவந்தேன் அண்ணுவே

வந்தயிடந்தனிலே இந்தஅரசனென்னை
வந்துபிடித்தடித்தான் அண்ணாவே ஐ

வசனம்

கேளும் அண்ணா! தங்களை பார்க்கும்படி வனம் வந்தோம் வந்தவர்களை இந்த அரசன் அடித்து யிழுத்துவந்தான் அண்ணாவே.

பெருந்திருவாள் தரு

மாமாவந்தனம்செய்தேனே உந்தன்மலரடிதன்னிலே
அரிவையாள் அன்புடன்மாமா வந்தனம்செய்தேனே
மாமா தங்களைப்பார்க்க மகிழ்ச்சியுடன்வந்தேன்
இந்தமானபங்கம் நேர்ந்ததையோமாமாவே மா

தருமர் வசனம்

அகோகேளும் பெண்ணே! பெருந்திருவாளே நீ ஒன்றுக்கும் ஆயாசப்படவேண்டாம். அகோகேளும் தம்பி அர்ச்சுனா! நமது தம்பி துரியோதனனுக்கும் பெருந்திருவாளுக்கும் பசி இளைப்பு அதிகமா ஏற்பட்டு ரொம்பவும் களைப்புற்று இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பசி தீரும்படியாக கானகத்தில் சென்று கனிவர்க்கங்களை பறித்து வரவேண்டும். ஆகையால் தம்பியாகிய வீமசேனனை நான் அழைத்தேனென்று அதிசீக்கிரத்தில் அழைத்து வாரும் தம்பி அர்ச்சுனா.

வீமன் வருகிற கவி

நலமுள்ள தமையன்சொன்ன ரஞ்சிதவசனம்கேட்டு
குலமுள்ள வலியவீமன் குணமுள்ள அசுரர்வாட
சதிசெய்யஎதிரிதன்னை சந்திரகுலத்துதித்த
நலமுள்ள தமையன்முன்னே வீமனும்வருகின்றானே.

வீமன் தரு

மதகரிவீமனிதோவந்தான் நல்ல
மகுடம்பளபளென்ன சிதரிடஓங்கி
கத்திகட்டாரிஇடைதுன்ன அந்த
காலனஞ்சிட வீரவண்டயங்கள்மின்ன
துண்டுவாள் தோமரங்கள்யீட்டி இந்த
உண்டுசெய் துரியனிட பகைதன்னைவாட்டி
அஞ்சாத ரணவீரதீரன் அந்த
மிஞ்சாதகொன்றிடும் மாறனவன்தீரன்
வருகிறவழிதனிலே துரியன் அவன்
மனதுபதறியே நிற்கையில்காலன்
கண்டானேவீமனும் அப்போ நல்ல
கடுங்கோபம்கொண்டுமே வாரானேசூரன் தன

வீமன் ஜம்பை தரு

சருணம்உந்தன் திருவடிக்கு தமையனேபோற்றிசெய்தேன்
என்னை அழைத்தவிதத்தைநீரும் எனக்கறியசொல்லவேண்டும்

தருமர் ஜம்பை தரு

உன்னை அழைத்தவிதம் உரைத்திடுவேன்கேளுமப்பா
கானகத்தில்நீயும்சென்று கனிபறித்துவாருமப்பா

தருமர் வசனம்

கேளும் வீமசேனா! நமது தம்பியாகிய துரியோதனனும் அண்ணாவாகிய கர்ணமகாராஜனும் மாமாவாகிய சகுனிமாமனும் நம்மைப் பார்க்கவேண்டும் என்று வந்து இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு விருந்துசெய்ய கானகத்தில் சென்று கனிவர்க்கங்களை பறித்துக்கொண்டு அதிக சீக்கிரத்தில் வாரும் தம்பி வீமசேனா.

வீமன் கவி

இப்படியாய் தருமருமே உரைக்கக்கேட்டு
இருவிழியும்பொறிபறக்க உதட்டைக்கவ்வி
எப்படிக்குதுரியனுமே வந்தானென்று
எதிர்க்கின்றான் அவனைக்கொல்ல குதிக்கின்றானே.

வீமன் கொண்டிச்சிந்து

அண்டரெண்டம் கிடுகிடென்ன வீமன்
ஆக்கரித்துவிழிகளில் நீர்தளும்ப
கண்டானே துரியனையும் வீமன்
கடுங்கோபம்கொண்டுமே துடிக்கின்றானே
அண்டாதகோபமதால் துரியனை
அடிக்குறேன்பாரென்று பதைக்குறானே (தத்தோம்)

தருமர் கந்தார்த்தம்

என்னடாதம்பிவீமா இதைநன்றாய்யோசிக்காமல்
அன்னிதசித்திரசேனன் அடித்தவன்பிடித்துபோனான்
உன்னிடதம்பியைநான் உரைத்துமேஅனுப்பிவைத்தேன்
உன்னிடமுரட்டுபுத்தி,

தரு

ஒருக்காலும்போவதில்லையே துன்மார்க்கபுத்தி
ஒருக்காலும்போவதில்லையே
பொறுக்ககோபம்வந்தாலும் பூமியின்மீதாழ்ந்த
இருக்கப்படுவாருனைக் கெள்ளளவும்இல்லையே ஒ

தருமர் வசனம்

கேளுந்தம்பி வீமசேனா! நீ கானகம் சென்று கனிபறித்துக் கொண்டு வந்தால் துரியனுக்கும் அவன் சேனைகளுக்கும் கொடுத்து பசியாறும்படி செய்து பின்பு அஸ்தினாபுரிக்கு அனுப்பிவிடலாம் தம்பி வீமசேனா.

வீமன் வசனம்

அப்படியே தங்கள் உத்தரவின்படி சென்று வருகிறேன் அண்ணாவே.

வீமன்சொல் தரு

தமையனிடத்தில் விடையும்பெற்றுமே வீமசேனனும்
தாவிவேகமாய் ஓடிவாரானே
ஆறுசுனைகள் நதிகள் தாண்டியே வீமசேனனும்
அன்பாய்வனத்தை தேடிவாரானே
காடுமலைகள் வனங்கள் தாண்டியே வீமசேனனும்
கடுகெனவே ஓடிவாரானே
காட்டில்வந்து கனியைபரித்தானே வீமசேனனும்
கஷ்டமில்லாமல் மூட்டைகட்டினான்
அண்டரண்டமும் நடுங்கிவாடவே வீமசேனனும்
அதிகவேகமாய் ஓடிவந்தேனே
அண்ணனிடத்தில் வந்துநின்றுமே வீமசேனனும்
அன்புடனே பணிந்துகொண்டானே தந்

வீமன் கவி

அடர்வனம்தனிலேசென்று அன்புடன்கனிபறித்து
திரமதாய்எடுத்துக்கொண்டு சீக்கிரம்வந்தேனண்ணா
படிமிசைதுரியபூபன் பசியாறிபுசிப்பதற்கு
அடைவுடன்அண்ணாஉந்தன் அடிதன்னில்வைத்துநின்றேன்.

வீமன் வசனம்

சருணம் சருணம் அண்ணாவே! நான் கானகம் சென்று கனி வர்க்கங்கள் கொண்டு வந்தேன். இதை பெற்றுக்கொள்ளும் அண்ணாவே.

தருமர் சொல் தரு துக்கடா

ஆனால்சந்தோஷம்கொண்டேன் தம்பிவீமா
அன்புடன்அமரவேண்டும் எந்தன் தம்பியே

வசனம்

கேளுமப்பா வீமசேனு! கனிவர்க்கங்களை பரிமாரவேண்டும் ஆகையால் நமது தேவியாகிய துரோபதாதேவியை அழைத்து வாருமப்பா வீமசேனு.

துரோபதை வருகிற கவி

மதிமுகவதனியான வஞ்சியாள்கேள்விப்பட்டு
அதிவிதபணிகள்மின்ன ஆடையும்அலங்கரித்து
திங்கள்போல்வதனரூபி சித்திரைமயிலைப்போலும்
தருமரும்அழைத்தாரென்று ரகுபதைவருகின்றாளே.

துரோபதை தரு

மதனரதிஒய்யாரி வதனமணிசிங்காரி
மாதுபாஞ்சாலிவந்தேன் நல்லநடைகொடிஅபிநய
மாதுபாஞ்சாலியந்தேன்

மதனசுந்தரரூபி அகிலமெங்கும்பிரதாபி
சுருள் அரைநெரிவரையருள் பிறையணிதிருமுரு
உருகொலிகிரமிகு மறையுருவான மத

காப்புகொலுசுபீலி மோப்புஜிமிக்கைதாலி
கங்கணம்பளபளென்னவே நவமணிகள்முத்துபணிகளலங்கிர்த
கங்கணம்டளபளென்னவே

தேரும்பரிகள்பூண்டு செவ்வையாகவேகண்டு
சுருள் திடமுடன்நானும் அடவுடன்போக
கெடிபெறும்தருமரை கடுகியேகாண மத

தரு

சருணம்உந்தன்திருவடிக்கு தாளிணைக்கேயான்சருணம்
கருணையுடன்எனையழைத்தநாதா காரணத்தைசொல்லுவீரே

தருமர் தரு

உன்னையழைத்தசேதி உரைப்பேன்கேளுமேபெண்ணே
ஓதரியஉன்முகமும் வாடலாகுமா உ

துரோபதை தரு

வாடிஎன்மனதுநொந்தேன்மங்களவதனு சுவாமிஇங்கிர்தவதனு
பாஞ்சாலன்மகளாகிவந்த பாவமிதுவோ வா

தருமர் தரு

வந்ததினால்என்னபாவம் வஞ்சியேகேளாய்பெண்ணே
மனதில்குறைவையாமலே அஞ்சாமல்சொல்வாய் வ

துரோபதை தரு

சொல்லுவாயென்றெந்தனையும் மல்லுசெய்குறீர்
ஒருசுற்றத்தார்க்குவழியில்லாமல் கெட்டுநொந்தேனே சொ

தருமர் தரு

கெட்டுநொந்ததைவிட்டு சொல்வாய்கிளிமொழியாளே
மானே தளிர்மேனியாளே உன்னை
கொண்டுவந்தநாள்முதலாய் விட்டுதென்மனம் கெ

துரோபதை தரு

தெரியசொல்லுவேன் தீனரட்சகா தொல்லல்படுவனுநாதா
திட்டமுடன்எனையழைத்த சேதிசொல்லுவாய்

தருமர் வேறு தரு

சொல்லுவேன்கேளுமடி பெண்மயிலே அடிபெண்ணே
சுயோதனராஜனுக்கு கண்மணியே
சத்தமாகநீயும்சென்று பெண்மயிலேஇந்த
சுருக்கினிலன்னம்போடு கண்மணியே செ.

துரோபதை தரு

எந்தவிதமதாக மன்னவரே நான்
எப்படிஅவன்முன்னேசெல்வேன் மன்னவரே
அரண்மனையிலிருந்தவனை மன்னவரே அவன்
ஆரண்யத்தில்ஓட்டிவைத்தான் மன்னவரே எ

தருமர் தரு

என்சத்தியம்தவறுமலே பெண்மயிலே நீ
சதிருடன்சென்றுவாரும் கண்மணியே
சென்றுவருகாவிட்டால் பெண்மயிலே இப்போ
சேயிழையேஎன்உயிரை மாய்த்துக்கொள்வேன் எ

துரோபதை வசனம்

கேளும் நாதா! தாங்கள் ஏன் என்மேல் கஷ்டப்படுகிறீர் நான் சென்று வருகிறேன் நாதா.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இவ்விதமாக துரோபதையம்மன் வருவதை பெருந்திருவானை யறிந்து ஏதென்று சொல்லுகிற விதங் காண்க.

பெருந்திருவாள் கவி

வஞ்சியென் தமக்கையாளே வன்மையாயுந்தன்பாதம்
கொஞ்சியேபணிந்துநின்றேன் கோதையைகார்த்திடாயே

துரோபதை கவி

ரஞ்சிததங்கையாளே நலமுடன்எந்தநாளும்
மிஞ்சியேவாழ்ந்திருப்பாய் மெல்லியேஎழுந்துவாரும்.

பெருந்திருவாள் தரு

அக்காஉன்பாதத்திற்கே அடிபணிந்தேன்
அடிபணிந்தேன் மலர்கரங்குவித்தேன் அ

துரோபதை தரு

வந்தடிபணிந்ததங்கையே என்றும்
வஞ்சியரேவாழ்ந்திருப்பாய் கொஞ்சியேசுகமதாக வ

பெருந்திருவாள் வேறு தரு

வாழுமென்றுசொன்னதாலே வஞ்சியாலெந்தனையும்
தாழ்வுவராமலிப்போ தற்காக்கவேண்டுமெக்கா வா

உள்ளமனமகிழும் என்ற மெட்டு

துரோபதை தரு

வன்மையுடனேஇன்றுவஞ்சியே வனந்தன்னில்
வந்தவிதத்தை சொல்லுமே எனக்குக்கூறுமே
வார்த்தைமிகவுஞ் சொல்லுமே
வார்த்தைகள் தன்னை வஞ்சிஎன்முன்னே
பூர்த்தியாய்யுன்னியே புகலுவாய்கன்னியே வ

பெருந்திருவாள் தரு

ஆரண்யம்பார்க்கவென்று அதிகபிரியமாக
அன்புடன்ஓடிவந்தோமே நாதனும்நானும்
தென்புடன்சென்றுவந்தோமே
அறிவையேஇன்னம் தெரியவேசொன்னேன்
கோரியேநாமுமே குளக்கரைசெல்லுவோம் ஆ

பெருந்திருவாள் வசனம்

அகோகேளும் அக்கா! நாங்கள் தங்களையும் வனத்தினுடைய வேடிக்கைகளையும் பார்க்கவேண்டுமென்று பிரியமுடன் வந்தோம். அப்போது இந்த சித்திரசேனன் எங்களை அடித்து தெய்வலோகம் இழுத்துக்கொண்டு போனதை உன் நாதன் தெரிந்து அவரோடு சமர்புரிந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்தார். ஆகையால் தங்களை நேரில்பார்த்தேன் இப்பவும் எனக்கானல் வனவேடிக்கைப் பார்க்கவும் ஜலக்கிரீடை செய்யவும் அன்புகொண்டு இருக்கிறேன். ஆகையால் சென்று வருகலாம் வாரும் எனதக்கா.

துரோபதை தரு

வாரும்வாரும்தங்கையே வழிநடப்போம்மங்கையே
சீருடனேநமதுஇல்லம் சேர்ந்திடுவோம்அங்கையே வா

பெருந்திருவாள் தரு

வருகுறேனேபின்னேயே வழிநடந்து முன்னேயே
இருவருமாககூடி யேகிடுவோம்கன்னியே வ

துரோபதை தரு

பூங்காவனம்வாருமே பூவையரேநீருமே
கோங்குமல்லிகைரோஜா கோதையரேபாருமே பூ

பெருந்திருவாள் தரு

நந்தவனம்வந்தோமே நங்கையின்பம்கொண்டோமே
விந்தையாகதங்கிருந்து மெல்லிசெல்வம்விண்டனே ந

துரோபதை வசனம்

அகோகேளும் தங்கையே! நாம் இருவரும் இந்த நந்தவனத்தில் இளைப்பாறி ஜலத்திற்குச்சென்று தீர்த்தமாடிச் செல்வோம் தங்கையே.

பெருந்திருவாள் தரு

அக்கையரேநதிஇறங்கி அன்பாய்வாருமே
ஆசமனஞ்செய்துநாமும் அருவைசேருமே அ

துரோபதை தரு

கன்னியரேஆடையோடு கங்கைமூழ்குவீர்
கரையிலேறிகற்புதெய்வ மென்றுவாழ்குவோம் க

பெருந்திருவாள் தரு

சொன்னபடிஅக்கையரே தோகைமூழ்கினோம்
துறையில்வந்துகற்புதெய்வ மென்றுமாழ்கினோம் சொ

துரோபதை தரு

தையலரேபொற்குடத்தில் ஜலத்தைமொள்ளுவோம்
சந்தோஷமாய்கரையிலேறி தையல்வந்தோம் தை

பெருந்திருவாள் தரு

தடகரத்தில்குடத்தைக்கொண்டு மொண்டோமே
தாவியேஇருவருமாய் விடுதிவருகுவோம் த

துரோபதை தரு

தேவனூரில்வாழும் விஷ்ணுகுலத்துங்கனும்
கூறும்ராமசாமிபாடல் கோரும்மங்கைநாம் தே

பெருந்திருவாள் தரு

வஞ்சியரோராமசாமி வரைந்தபதத்தையே
வாராய்நாம்வாழ்த்தி போற்றிவந்தோமிடத்தையே வ

துரோபதை வசனம்

ஆனால் கேளும் தங்கையே! நாம் வந்து வெகுநேரமாகி விட்டது. ஆகையால் தருமநந்தனர் அறியாமுன் விடுதிபோய் சேரலாம் வாரும் தங்கையே.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் இவ்விதமாக பெருந்திருவாளையும் துரோபதையும் இருவரும் தீர்த்தமாடி பர்ணகசாலைக்கு வந்தார்கள். அப்போது தருமநந்தனர் துரியனுக்கு போஜனமளிக்க வீமனைப் பார்த்து ஏதென்று தெரிவிக்கிறவிதங் காண்க.

தருமர் தரு

வீமனே வாடா விரைவில்சென்று
விற்பிடித்தெதிர்வாடா கண்மணியே
அஸ்தினாபுரிக்கினீ அழகுடன்சென்று
அண்ணனைவிட்டுவாடா கண்மணியே
வனந்தனில்சென்று வருத்தம்செய்யாமல்
வண்மையுடன்விட்டுவாடா என் தம்பிவீமா
கானகம்விட்டு களிப்புடன்சென்று
கடுகெனவந்திடுவாய் கண்மணியே

வீமன் தரு

ஓடியேவருவேன் உன்னிடமொழிபோல்
உத்தமன்வந்திடுவேன் அண்ணாவே
தேடியேதிருமூவர் யார்வந்தெதிர்த்தாலும்
தீரமாய்வாட்டுவேனே அண்ணாவே
எனக்குவிடை தந்தால் இப்பவேநானும்சென்று
ஏகியேவிட்டுவாறேன் அண்ணாவே

தருமர் வசனம்

கேளும்தம்பி வீமசேனா! நீ என்ன இவர்களை கானகத்தில் ஒன்றுஞ்செய்யாமல் அழைத்துக்கொண்டுபோய் அஸ்தினாபுரியில் விட்டுவிட்டு சீக்கிரம்வந்து பதில் தெரிவிக்கவேண்டும் தம்பி வீமசேனா.

வீமன் சொல் தரு

எழுந்திரும்துரியா எனக்கின்பம்வருமா உன்னை
இடரொன றும்செய்யவில்லை அண்ணாவே

இடமதிலிருந்து இருந்திடு முன்னே இப்போ
அழைத்துபோகசொன்னாரண்ணன் துரியோனே எ

துரியோதனன் தரு

என்னிடதம்பி ஏகியேவருவேன்
இன்னமுஞ்ஜாலமேனோ தம்பியரே
ஜாலஞ்செய்யாமல் சடுக்கெனசென்று
தமையனேபணிந்துவாறேன் வீமசேனா எ

துரியோதனன் வசனம்

கேளுந்தம்பி வீமசேனா! நான் சென்று தமயனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வருகிறேன் வீமசேனா.

துரியன் தரு

அண்ணாசருணம் அதிபெல நண்ணா சருணம்
அண்ணாஉந்தன்பாதம் அடியிணைபோற்றினேன்
மன்னனேஎந்தனே மகிழ்ந்துமேஅனுப்புவீர் அ

தருமர் தரு

ஏகுவாய்தம்பி துரியபூபா ஏகுவாய்தம்பி
ஏகுவாய்நீயுமே இந்தவனத்தைவிட்டு
பாகுசேர்மொழியான பைங்கொடியைக்கூட்டி

தருமர் வசனம்

கேளுந்தம்பி துரியோதனா! உன் தேவியையும் அழைத்துக் கொண்டு வீமனை துணைக்காக அனுப்பி இருக்கிறேன் அவனோடு சீக்கிரமாக சென்றுவாரும் துரியோதனா.

பொது வசனம்

இவ்விதமாக துரியோதனன் தருமரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு தனதுதேவியை அழைத்துக்கொண்டு வருகிற துரியனைப் பார்த்து வீமன் அழைத்து மூவருமாய் செல்கிறவிதங் காண்க.

வீமன் சொல் தரு

வாரார்பாரீர் மூவருங்கூடி வாரார்பாரீர்
நேராககானகம் தன்னைக்கடந்துமே
நெடியபுஷ்பரதமும் வடிவாகவிட்டுமே
சுருள் நேசமானவன வாசத்தைவிட்டுமே
ஆசையாகஅஸ்தினா புரிதனில்வந்தோம் வா

பொது வசனம்

இவ்விதமாக மூவரும் அஸ்தினாபுரிக் கருகாமையில் வந்ததும் வீமனை துரியன் பார்த்து ஏதென்று சொல்கிற விதங்காண்க.

துரியன் தரு

வருகாதேவீமா அஸ்தினபுரம் வரவேண்டாம்பூமா
வனத்திலிருந்தவர்கள் வளர்நாட்டில்வந்தாலே
வகைமோசம்வருஞ்சொன்னேன் வந்தவழியேபோடா வ

பெருந்திருவாள் தரு

காட்டைமெரித்தகாலால்நீ நாட்டைமெரிக்கலாமோ
கடுகெனஓடிப்போடா வீமசேனா
வீட்டைமெரித்தகாலால் காட்டைமெரிக்கலாமோ
வீணனேஓடிப்போடா வீமசேனா
இந்தஇடத்தைவிட்டு உன்எண்ணத்தின்படிநீயும்
ஏகிநடந்திடடா வீமசேனா

வீமன் தரு அடதாளம் சாப்பு

இப்படிதெரிந்திருந்தால் அப்பவேஉங்களைநான்
ஆரண்யத்தில்கொன்றுவிடுவேனே பெருந்திருவே
ஆரண்யத்தில்கொன்றுவிடுவேனே

செப்பரியஅண்ணன்மொழி இப்பவேநான்கேட்டதினால்
இந்தபங்கம்வந்துநேர்ந்ததே எந்தனுக்கிப்போ
இந்தபங்கம்வந்துநேர்ந்ததே

இப்பொழுதேநானும்சென்று ஏகியேதமயன்தன்னை
ஒப்பியேநான்கொல்வேனென்றுமே வீமசேனனும்
ஓட்டமாகதிரும்பிவாரானே

துரியன் தரு

பெண்மயிலேபெருந்திருவே இன்னம்இங்கேஇருக்கிறானே
பிடித்துநீதள்ளிவாருமே எனதுதேவி
பிடித்துநீதள்ளிவாருமே

ஐயோஐயோசகுனிமாமா ஐவர்அடிவைத்தாலே
அழிந்துபோகும்அஸ்தினபுரமும் எனதுமாமா
அழிந்துபோகும்அஸ்தினபுரமும்

கண்மணியேபெருந்திருவே கனமுள்ளவீமனையும்
கட்டையாலடித்துவருகுவாய் எனதுபெண்ணே
நீகட்டையாலடித்துவருகுவாய்

சாணமதைநீகரைத்து சதிருடன்அவன்தலையில்
ஜல்தியாய்ஊற்றிவருகுவாய் எனதுபெண்ணே
ஜல்தியாய்ஊற்றிவருகுவாம்

## பெருந்திருவாள் தரு

சாணத்தையும்நான்கறைத்து ஜல்தியாய்வீமன்தலையில்
சட்டிக்கொண்டுகானுடைத்தேனே துடப்ப
கட்டையாலடித்தேனே

பார்த்தும்பாராமலேவீமன் அவன்
பங்கப்பட்டுஓடிவாரானே தருமரிடம்
பங்கப்பட்டுஓடிவாரானே

## வீமன் புலம்பல் தரு

அடவியைவிட்டுநானும் அஸ்தினபுரியில்சென்று நான்
அவமானம்பட்டுவந்தேன் அண்ணாவே

மன்னனெந்தனைஅவர் மர்மமாய்அழைத்துச்சென்று என்னை
மானபங்கம்செய்துவிட்டார் அண்ணாவே

உந்தனுக்குபயந்துஅவரை உயிருடன்விட்டுநானும் நான்
ஓட்டமாய்ஓடிவந்தேன் அண்ணாவே

## பொது வசனம்

இவ்விதமாக துரியோதனாதிகள் செய்த மரியாதையை தருமருக்குத் தெரிவிக்க தருமர் சொல்லுகிறவிதங் காண்க.

## தருமர் தரு

அஞ்சாதேவீமாஒருக்காலும் நமக்குஅபஜெயம்வருமா
சஞ்சலப்படவேண்டாம் சமயம்பார்த்தநீயும்

தடையில்லாமலேசண்டை முடிவிலேகொல்லுவாய்
சாபம்வெல்லாதுபுண்ணியம் தன்னைபாபம்வெல்லாது

கோபமேகுடிகொள்ளும் குலையும்குலமழிக்கும்
கூறும்உலகவார்த்தை பாரும்பழுதுவாராது அ

## தருமர் புலம்பல்

அச்சுதனேமேகவர்ணா இச்சமயம்வாருங்கண்ணா
பச்சநிறமானமாயனே கருடனேறி
இச்சமையம்வாரும்நேயனே

ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரண்யத்தில்தவித்துநின்றோம்
ஆதரிக்கவேண்டும்கண்ணனே எந்தனைவந்து
ஆதரிக்கவேண்டும்கண்ணனே

தாமரையிலையின்மீதில் தண்ணீர்தவிப்பதுபோல
தத்தளிக்கவிடலாகுமோ கோபாலகிருஷ்ணா
தத்தளிக்கவிடலாகுமோ

இன்னமெந்தன்மீதிலென்னு வர்மமோனானறிகிலேன்
இந்தவேளைவந்துகாருமே கோபாலகிருஷ்ணு
இந்தவேளைவந்துகாருமே

தருமர் வசனம்

அகோ தெப்படியென்றால் தருமர் ஸ்ரீகண்ணனை தியானம் செய்யும்போது ஸ்ரீகண்ணன் சபைக்கு வருகிறவிதங் காண்க.

கிருஷ்ணமூர்த்தி வருகிற கவி

மைத்துனன்தர்மராஜன் மனம்வாடிபுலம்பும்போது
எத்திசையோர்துதிக்க எழிலானகெருடனேறி
சத்துருசங்காரலோலன் தருமரைக்கார்க்கவேண்டி
சித்தத்தில்நினைத்தாரென்று ஸ்ரீகண்ணன்வருகின்றாரே.

கிருஷ்ணன் தரு

தேவாதிதேவரிதோவந்தார் திருமூவரிலொருவா
தேவகிமைந்தனிதோவந்தார்

பாலகிருஷ்ணனான ஆயர்பாடியில் வெண்ணெயுண்டேன்
பார்த்தீபன்தனக்குதங்கை பாஞ்சாலியைமணம்முடித்தேன்

சுருள் பன்னுமுனிவர்க்கு கண்ணனும்நானே
மண்ணையுண்டதிரு வண்ணனும்நானே தேவ

ஆயிரத்தெட்டண்டமுண்ட துங்கன் இரணியனை
அதிரஉடல்கிழித்தசிங்கன்

பதரவேபூமிதன்னை பாயாய்சுற்றிசூரனை
பன்றியுமானேன் அவனுயிர்கொண்றிடலானேன்

சுருள் பாதகஅம்மான் கஞ்சனைகொன்றேன்
பூதகிமுலைபாலையும் உண்டேன் தேவ

கிருஷ்ணன் வசனம்

கேளும் மாதவா! தருமர் என்னை நினைத்து வரும்படி துதிக்கின்றார். ஆகையால் நான் கெருடனேறி செல்லவேண்டுமடா மாதவா.

கிருஷ்ணன் தரு

பண்ணவர்முனிவர்களும் என்றும்என்னைக்கொண்டாட
பரந்தாமன்வந்துமேவினேன் பாண்டவர்தூதன்
பரந்தாமன்வந்துமேவினேன்

நிரந்தரமானலோலன் நித்தியஸ்வரூபனுன
அருள்பெருகும்தர்மனவர் அழுகும்குறையைநீக்க

சுருள் அண்டத்தையுண்ட செங்கனிவாயன்
பண்டரிபுரமதில் அமர்ந்திடும்நேயன்
வட்டமானகெருடனேறி வந்தேன்காமதேனுதனம்
கானகத்தில்பஞ்சவரை கண்டுமனமகிழ்ந்தேன் பண்

கிருஷ்ணன் வசனம்

கேளும் மைத்துனு! என்னை ஏதுகாரணமாய் நினைத்தீர் அதை எனக்கு தெரிவிக்கவேண்டும் மைத்துனு.

தருமர் வசனம்

மைத்துனு நமஸ்காரஞ் செய்கின்றேன்.

கிருஷ்ணன் வசனம்

மைத்துனு மங்களமுண்டாகட்டும்.

தருமர் தரு

என்னவென்றுசொல்லப்போறேம் மைத்துனரே
இந்தவனத்தினில்கஷ்டபட்டோம் மைததுனரே
உந்தனைபார்க்காமலேமைத்துனரே ஓகோமைத்துனரே
உள்ளமும்வாடிநொந்தோம் மைத்துனரே எ

கண்ணன் தரு

என்னகாரணமோதான் பஞ்சவரே ஓகோ பஞ்சவரே
எனக்குஎடுத்துரைக்கவேண்டுமப்பா பஞ்சவரே ஓகோ பஞ்சவரே
பரந்தாமன்நானிருக்க பஞ்சவரே ஓகோ பஞ்சவரே
உமக்குபழுதுகள்வந்ததென்ன பஞ்சவரே ஓகோ பஞ்சவரே

கண்ணன் வசனம்

கேளும் தர்மநந்தனு! இவ்வனத்தில் எவ்விதக்கஷ்டம் வந்தாலும் நான் உங்களுக்கு துணையிருக்கிறேன். நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் தர்மநந்தனு.

பொது வசனம்

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தியும் தர்மநந்தனரும் வார்த்தையாடிக்கொண் டிருக்கும்போது துரோபதையம்மன் தமையனைப் பார்த்து பணிகிறவிதங் காண்க.

துரோபதை தரு

தாமோதராரிஷிகேசனே உந்தன்
சற்குணபாதமேவந்தனம்

தங்கையாளெந்தனை பொங்கமதாகவே
இங்ஙனம்வேண்டிய மங்களமறியேன் தா

கிருஷ்ணன் தரு

தோமுவடிவழகி யென்றும்
சுகித்துமிகவாழி

துண்ட துரியனை கண்டதுமுண்டோ
சாந்தனுக்கதனை ஓதிடவேண்டுமே தோ

துரோபதை தரு

அண்ணயிதுஎன்ன யெந்தன்
அருமை பாவமறியேன்

அல்லலுண்டாகியே வந்ததுரியனும்
அவனுமிவ்விடம் அண்டிவந்தானே அ

கிருஷ்ணன் வேறு தரு

வந்ததுரியனவன் எந்தஇடந்தனிலே
வன்மையுடன்இருக்கிறான் சொல்லுமம்மா வ

துரோபதை தரு

அந்ததுரியனவன் அஸ்தினபுரம்சென்று
அமர்ந்துஇருக்கின்றானே அண்ணவே அ

துரோபதை வசனம்

கேளுமெனது அண்ணவே! துரியோதனனவன் இவ்விடம் வந்ததற்கு தகுந்த மரியாதைசெய்து அஸ்தினபுரத்திற்கு அனுப்பி விட்டார்கள் அண்ண.

கிருஷ்ணன் வசனம்

கேளுமம்மா தங்கா! எனக்கானல் சந்தோஷமாய் விட்டது அமருவாய் தங்கா.

வீமன் தரு

மாயவரேகோவிந்தா மதகரிவீமன்நானும்
மலரடிபோற்றிசெய்தேன் மைத்துனரே

அண்ணன்வார்த்தையைக்கேட்டு அஸ்தினபுரம்சென்றுநான்
அவமானம்பட்டுவந்தேன் மைத்துனரே

வீமன் வசனம்

கேளும் சுவாமி பகவானே! துரியோதனன் எங்களை பார்க்கும் படியாக திருட்டு எண்ணங்கொண்டு வந்தான். வந்தவனை என் தமையன் அழைத்துக்கொண்டு போகச்சொன்னார். நான் அழைத்துக்கொண்டு அஸ்தினபுரிக்குச் செல்ல அவர்கள் என்னை அவமானம் செய்துவிட்டார்கள் என் வஞ்சத்தை எல்லாம் எப்போது முடிப்பேன் சுவாமி பகவானே.

கிருஷ்ணன் தரு

என்னபுத்திநீநினைந்தாய் தர்மநந்தன
என்னபுத்திநீநினைந்தாய்

என்னபுத்திநீநினைந்தாய் மன்னன்வீமன்தனையனுப்ப
சொன்னபோதேஎந்தனுக்கு எண்ணமும்வேறுகுதையா என

தருமர் தரு

அபயகுரலைக்கேட்டு அர்ச்சுனனையனுப்பஇந்த
அவமானம்வந்ததையா ஆதிமாயனே

பஞ்சவர்ஐவரில்பரந்தாமாவந்துகாரும் ஆதிமாயனே
பார்த்துபுலம்பினனேபரமனேபாதுகார்த்தேன் ஆதிமூலமே

இந்தவேளைஎங்கள்மேல் இந்தகோபம்கொள்ளலாமோ
எங்களைப்பாதுகாரும் மேகவண்ணனே

வசனம்

கேளும் சுவாமி பகவானே! தங்கள் அபயமிடுகின்றவர்களுக்கு அபயங் கொடுக்கும்படி தெரிவித்ததினால் நான் அபயஸ்தம் கொடுத்தேன். ஆகையால் என்மீதில் கோபம்கொள்ளவேண்டாம் எங்களை பாதுகார்க்கவேண்டும் பகவானே.

கிருஷ்ணன் வசனம்

கேளும் தர்மநந்தன! நீங்கள் அனைவரும் இந்த வனத்தை விட்டு மறுவனம் செல்லுங்கள் நான் வைகுந்தம் சென்று வருகிறேன் மைத்துன.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இவ்விதமாக தர்மர் சித்திரசேனனுக்கு விடைகொடுத்து அனுப்பிய சித்திரசேனன் தந்தை இடத்தில் சொல்லுகிறவிதம் காண்க.

சித்திரசேனன் தரு

என் தந்தையே சருணம் உமதுபாதம்
என் தந்தையே சருணம்

தந்தையேஉன்பாதம் தனயன்சாஷ்டாங்கம்செய்தேன்
விந்தையாய்உன்னிடம் விளம்புவேன்கேளையா த

இந்திரன் தரு

வந்ததினுல்எந்தனுக்கு மனதுசந்தோஷமாச்சு
எந்தனைபணிந்தமைந்தனே என்னிடத்தில்சொல்லுவாயே வ

சித்திரசேனன் தரு

நான்சமர்புரியபோகும்போது என் தந்தையரே
துரியன்என்றுநான் அறிந்தேன் தந்தையரே
பிடித்தபிடியுடனே தந்தையரே
அவனைபின் கட்டாய்கட்டிவந்தேன் தந்தையரே நா

இந்திரன் தரு அடதாளம் சாப்பு

அந்தமுள்ள துரியன் அவன் எங்கேயிருக்கின்றுனே
அருமையுள்ளஎந்தன் மைந்தா அவனைநீகொண்டுவாரும் அ

சித்திரசேனன் தரு

நான்கொண்டுவருகும்போது தந்தையேஓகோதந்தையே
குருகுலத்துமன்னன்அவன் தந்தையே

பாண்டுவின்புத்திரனும் தந்தையே அவன்
பாராளும்அர்ச்சுனனும் தந்தையே

எனக்குநீதம்பிஎன்று தந்தையே அவன்
இழுத்துசென்றுன்தர்மரிடம் தந்தையாரே நா

இந்திரன் தரு அடதாளம்

என்னசொன்னுன்தர்மனவன் எனக்குஉரைக்கவேணும்
பின்னகமில்லாமலே பிரித்துசொல்லும்எந்தனிடம் எ

சித்திரசேனன் வசனம்

கேளும் எனது தந்தையே! நான் கானகம் சென்று துரியோதனனை பிடித்து கொடிகம்பத்தில் கட்டிவரும்போது அர்ச்சுனன் கண்டு என்னேடு எதிர்த்து சண்டைசெய்து தருமரிடம் இருவரையும் கொண்டுவந்துவிட்டான். அப்போது தர்மர் என்னை துரியனை விட்டு தங்களிடம் போகும்படி தெரிவித்தார். நான் வந்துவிட்டேன் தந்தையே.

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தி பஞ்சவர்கள் ஐவரும் மகாவிஷ்ணுவிடம் விடைபெற்றுக்கொண்டு சித்திரசேனனை தேவலோகம் அனுப்பிவிட்டு ஏதாவது கந்தர்வவனம் சென்றார்கள். இந்த நாடகத்தை ஆடினபேர்களும் பாடினபேர்களும் காதினால் கேட்டபேர்களும் சாலோக சாமீப சாரூப சாயுச்யமென்று சொல்லக்கூடிய நான்காம்பதவி அடைவார்கள் என்பதாம்.

### மங்களம்

| | | | |
|---|---|---|---|
| மங்களம் | ஜெயஜெய | மங்களம் | |
| மங்களம் | ஜெயஜெய | மங்களம் | |
| பஞ்சவர்க்கும் | மன்னன் | சித்திரசேனனுக்கும் | |
| மங்களம் | ஜெயஜெய | மங்களம் | ம |

### வாழி கவி

அந்தணர்அரசர்வாழ்க அருமுனியோர்கள்வாழ்க
அந்தநல்சரிதந்தன்னை எழுதினோர்படித்தோர்வாழி
பந்தமாய்கேட்போர்வாழி பாருலகுள்ளோரெல்லாம்
செந்திருவருளைப்பெற்று சிறப்புடன்வாழ்கவாழ்க.

துரியோதனன் கெர்வபங்கமென்னும்

அர்ச்சுனன் சண்டை நாடகம்

முற்றிற்று.

---

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை.
எம்எஸ். 339. காபி 1000. (5-8-1947)

O-2 NRM,A
N47
1-A
2-74

# மலர்மகள் பதிப்பின் நாடக விளம்பரம்

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில்: இதன் அடியிற்கண்ட புத்தகங்களும், இன்னும் அநேகவிதமான புத்தகங்களும், எமது மலர்மகள்விலாசஅச்சுக்கூடத்தில் தகுந்தவித்வான்களைக் கொண்டு பிழையறச் சீர்திருத்தி அச்சிட்டுவருவதால் யாவரும் பூமகள் பதிப்பை கவனித்து வாங்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

| (ரிஜிஸ்டர்காபிரைட்செய்தது) | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| வள்ளிகலியாணநாடகம் | 0 | 12 | 0 |
| சிங்கீசர்கலியாணநாடகம் | 0 | 12 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகமென்னும் குசலவநாடகம் | 0 | 12 | 0 |
| மாங்கனி சரித்திர நாடகம் | 0 | 12 | 0 |
| கம்ச சம்மார நாடகம் | 0 | 12 | 0 |
| தொண்டரடிப்பொடியாழ்வார் நாடகம் | 0 | 12 | 0 |
| தாருகாவனரிஷி சரித்திர நாடகம் | 0 | 12 | 0 |
| கமலவல்லி நாடகம் | 0 | 12 | 0 |
| பத்மாவதி நாடகம் | 0 | 12 | 0 |
| நரகாசுர சம்மார நாடகம் | 0 | 12 | 0 |
| சந்திரன் கர்வபங்கமென்னும் சந்திராம்பாள் நாடகம் | 0 | 12 | 0 |
| மணிமாலன் சண்டை நாடகம் | 0 | 12 | 0 |
| வீமன் அர்ச்சுனன் யுத்த நாடகம் | 0 | 12 | 0 |
| ஸ்ரீராம ஆஞ்சநேய யுத்த நாடகம் | 1 | 0 | 0 |
| சிறுத்தொண்டபத்தன் நாடகம் | 1 | 0 | 0 |
| வல்லபைகலியாணமென்னும் விநாயகர் கலியாணநாடகம் | 0 | 12 | 0 |
| சுபத்திராபரிணய நாடகம் | 1 | 0 | 0 |
| இலட்சுமணதேவி மாலையிடு நாடகம் | 0 | 12 | 0 |
| அருந்ததி கலியாண நாடகம் | 0 | 12 | 0 |
| வல்லாளமகாராஜன் நாடகம் | 0 | 12 | 0 |
| கேதாரி ஈஸ்வரர் நோன்பு நாடகம் | 0 | 12 | 0 |
| பார்வதி இடபாகம்பெற்ற மகிடாசூர சம்மார நாடகம் | 0 | 12 | 0 |
| சகுந்தலை நாடகம் | 0 | 12 | 0 |
| சித்திரசேனன் சரித்திர நாடகம் | 0 | 12 | 0 |
| வாணசூரன் சண்டை நாடகம் | 0 | 12 | 0 |
| புனந்திரன் தூது என்னும் சின்ன அர்ச்சுனன் சண்டை | 0 | 12 | 0 |
| கெஜகௌரி என்னும் காந்தாரி நோன்பு நாடகம் | 0 | 12 | 0 |
| துரியோதனன் கெர்வபங்கமென்னும் அர்ச்சுனன்சண்டை | 0 | 12 | 0 |
| சுந்தரராஜன்பாபவிமோசன கிருஷ்ணார்ச்சுனன் சண்டை | 0 | 12 | 0 |
| கெம்பீரசூரன்வதை துரோபதைகல்வாய்சமைந்தநாட | 0 | 12 | 0 |
| கடோர்கஜன் சண்டை என்னும் துரோபதை நாடகம் | 0 | 12 | 0 |
| நல்லதங்காள் நாடகம் | 1 | 0 | 0 |

102648

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாச அச்சுக்கூடம்
23, தாண்டவராயம்பிள்ளை வீதி சென்னை.

1-A
2-74

# ஸதநாமாவளி ஸ்தோத்திரம்

ஓம் ஹரிஹரி
நரஹரி, முரஹரி
அம்புஜாக்ஷரி
அச்சுதா, உச்சிதா
பஞ்சாயுதா
பாண்டவர்தூதா
லக்ஷ்மீசமேதா
லீலாவிநோதா
கமலபாதா
ஆதிமத்யாந்தரகிதா
அனாதரக்ஷகா
அகிலாண்டகோடி
பிரம்மாண்டநாயகா
பரமானந்தா
முகுந்தா
வைகுந்தா
கோவிந்தா
பச்சைவண்ணா
கார்வண்ணா
பன்னகசயனா
கமலக்கண்ணா
ஜனார்த்தனா
கருடவாஹனா
ராக்ஷஸமர்த்தனா
காளிங்கநர்த்தனா
சேஷசயனா
நாராயணா
பிரம்மபாராயணா
வாமனா
நந்தநந்தனா
மதுசூதனா
பரிபூரணா
சர்வகாரணா
வேங்கடரமணா
சங்கடஹரணா
ஸ்ரீதரா

துளசிதரா
தாமோதரா
பீதாம்பரா
சீதாமனோஹரா
மச்சகச்சவராஹவதா
பலபத்ரா [ரா
பரமதயாபரா
பரமேசுவரா
சங்குசக்ரா
ஸர்வேஸ்வரா
கருணாகரா
ராதாமனோகரா
ஸ்ரீரங்கா
ஹரிரங்கா
பாண்டுரங்கா
லோகநாயகா
பத்மநாபா
திவ்யசொரூபா
புண்ணியபுருஷா
புருஷோத்தமா
ஸ்ரீராமா ஹரிராமா
பரந்தாமா
நரசிம்மா
திரிவிக்ரமா
பரசுராமா
சஹஸ்திரநாமா
பக்தவத்ஸலா
பரமதயாளா
தேவானுகூலா
ஆதிமூலா
ஸ்ரீலோலா
வேணுகோபாலா
மாதவா, யாதவா
ராகவா, கேசவா
வாசுதேவா
தேவதேவா

ஆதிதேவா
ஆதிபத்பாந்தவா
மஹானுபாவா
வசுதேவிதநயா
தசரததநயா
மாயாவிலாசா
வைகுண்டவாசா
சுயம்பிரகாசா
வேங்கடேசா
ருஷீகேசா
சித்விலாசா
கஜபதி, ரகுபதி
சீதாபதி
வேங்கடாசலபதி
மாயா, ஆபா [யா
வெண்ணெயுண்டனே
அண்டர்களேத்தும்
தூயா
உலகமுண்டவாயா
நானாவுபாயா
பக்தர்கள்சகாயா
சதுர்ப்புஜா
கருடத்துவஜா
கோதண்டஹஸ்தா
புண்டரீகவரதா
ஓ! விஷ்ணு
ஓ! பராத்பரா
பரமதயாளா
ஓம் நாராயணா
நமோநாராயணா
ஸ்ரீமந்நமோநாராய
சரணம்ப்ரபத்யே [ணா
ஸ்ரீமதே நாராய
ணாய நம
கோவிந்தகோவிந்த
கோபால கோபால

ஸதநாமாவளி ஸ்தோத்திரம் முற்றிற்று.